வடக்கின் முதல் நாளிதழ் – Estd 1959

Reg. No. : P. 1632

விலை ரூ. 30/=

# ஈழநாடு

Eelanadu ඊළනාඩු




Email : news@eelanadu.lk | மலர் : 05 | 12.12.2023 செவ்வாய்க்கிழமை | இதழ் : 344 | பக்கங்கள் : 12

## வாழ்நாள் சாதனையாளர் விருது 'ஈழநாடு'வின் தில்லைநாதனுக்கு!

யாழ்ப்பாணம், டிசெ. 12

வடமராட்சி - புலோலியை சேர்ந்த மூத்த ஊடகவியலாளரும் ஈழநாடு பத்திரிகையின் வடமராட்சி செய்தியாளருமான சின்னத்துரை தில்லைநாதனுக்கு இலங்கை பத்திரிகை ஸ்தாபனமும் பத்திரிகை ஆசிரியர் சங்கமும் இணைந்து 'வாழ்நாள் சாதனையாளர் விருது' வழங்கிக் கௌரவிக்கின்றன.

இந்த விருது வழங்கும் நிகழ்வு இன்று செவ்வாய்க்கிழமை கொழும்பில் நடைபெறுகின்றது.



'வடமராட்சி தில்லைநாதன்' என அழைக்கப்படும் மூத்த ஊடகவியலாளர் தில்லைநாதன் 50 ஆண்டு

11

# தமிழ் எம். பிக்களை அவசரமாக நாளை சந்திக்கிறார் ஜனாதிபதி

## பட்ஜெட் வாக்கெடுப்பு நடைபெறுவதற்கு சில மணி நேரங்களுக்கு முன்னர் ஏற்பாடு

கொழும்பு, டிசெம்பர் 12

வரவு - செலவுத் திட்டம் மீதான இறுதி வாக்கெடுப்பு நாளை புதன்கிழமை மாலை 6 மணிக்கு நடைபெறவுள்ள நிலையில், அன்று பிற்பகல் 3 மணிக்கு வடக்கு-கிழக்கு மாகாணங்களைப் பிரதிநிதித்துவப்படுத்தும் தமிழ் பாராளுமன்ற உறுப்பினர்களை அவசரமாக சந்தித்து பேசவுள்ளார் ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க.

பாராளுமன்றக் கட்டடத் தொகுதியில் இந்த அவசர சந்திப்பு நடைபெறவுள்ளது.

நல்லிணக்கம் குறித்து கலந்துரையாடுவதற்கு இந்தக் கூட்டம் ஏற்பாடு செய்யப்பட்டுள்ளதாக அழைப்புக் கடிதத்தில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

இதற்கான அழைப்புக் கடிதங்கள் சகல தமிழ்த் பாராளுமன்ற உறுப்பினர்களுக்கும் அனுப்பி வைக்கப்பட்டுள்ளது.

வரவு - செலவுத் திட்டத்தின் இறுதி வாக்கெடுப்பு நாளை மாலை

11

## பொதுஜன பெரமுனவின் உயர் பதவிகள் மாறாது!

### நாமல் ராஜபக்ஷ கூறுகிறார்



கொழும்பு, டிசெ. 12

சுகததாச உள்ளக விளையாட்டரங்கில் எதிர்வரும் 15ஆம் திகதி நடைபெறவுள்ள பொதுஜன பெரமுனவின் இரண்டாவது மாநாட்டில் கட்சியின் முக்கிய நிர்வாக பதவிகளில் மாற்றம் எதுவும் ஏற்படாது என பாராளுமன்ற

11

## யாழ். பல்கலை மாணவரிடம் விசாரணை

யாழ்ப்பாணம், டிசெ. 12

யாழ்ப்பாணப் பல்கலைக்கழக மாணவனும் கலைப்பீட மாணவர் ஒன்றிய முன்னாள் உப தலைவருமான இராசரத்தினம் தர்சனிடம் பயங்கரவாத தடுப்பு பிரிவினர் யாழ்ப்பாணத்தில் உள்ள பணிமனை

11

## யாழ்ப்பாணத்துக்கு நதி! திட்டமிடுகின்றதாம் அரசு

கொழும்பு, டிசெ. 12

வடக்குக்கு நீர் வழங்குவதில் கவனம் செலுத்தி யாழ்ப்பாணத்துக்கு நதி ஒன்றை உருவாக்க திட்டமிடப்பட்டுள்ளதாக வனவிலங்கு மற்றும் வன வளங்கள் பாதுகாப்பு நீர்ப்பாசன அமைச்சர் பவித்ரா வன்னியாராச்சி தெரிவித்தார்.

நீர்ப்பாசன அமைச்சின் வரவு - செலவு திட்டம் மீதான விவாதத்தில் நேற்று பாராளுமன்றத்தில் கலந்து கொண்டு உரையாற்றும்போதே அமைச்சர் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்-

'யாழ்ப்பாண நதி' என பெயரிடப்பட்டுள்ள இத்திட்டத்தின் முதற்கட்ட ஆய்வுகள் நெதர்லாந்து அரசினால்

11

## 57 மேலதிக வாக்குகளால் நிறைவேறியது வற் வரி சட்டம்

கொழும்பு, டிசெ. 12

பெறுமதி சேர் வரி திருத்தச் சட்டமூலம் 57 மேலதிக வாக்குகளால் நிறைவேற்றப்பட்டுள்ளது.

பெறுமதி சேர் வரி திருத்தச் சட்டமூலதிற்கு ஆதரவாக 98 வாக்குகளும் எதிராக 41 வாக்குகளும் அளிக்கப்பட்டன.

முன்னாள் விளையாட்டுத்துறை அமைச்சர் ரொஷான் ரணசிங்க இதற்கு எதிராக வாக்களித்திருந்தார். (அ)

## அமெ. விசேட பிரதிநிதி இலங்கைக்கு வருகை

கொழும்பு, டிசெ. 12

இன சமத்துவம் மற்றும் நீதிக்கான அமெரிக்காவின் விசேட பிரதிநிதியான டீசிரி கோமியர் ஸ்மித் உத்தியோகபூர்வ பயணம் மேற்கொண்டு இலங்கை வந்துள்ளார்.

நேற்று வருகை தந்த அவர் ஒரு வார காலம் நாட்டில் தங்கியிருப்பார்



என தெரிவிக்கப்படுகின்றது.

இந்த காலப் பகுதியில்,

11

## வீதியில் சென்ற பெண்ணை தாக்கி பகலில் தங்க நகைகள் கொள்ளை

### அச்சுவேலியில் நேற்று சம்பவம்

யாழ்ப்பாணம், டிசெ. 12

அச்சுவேலி பகுதியில் தனிமையில் சென்ற பெண்ணைத் தாக்கி அவரிடம் இருந்து தங்க நகைகள் கொள்ளையடிக்கப்பட்ட சம்பவம் நேற்று இடம்பெற்றுள்ளது.

மோட்டார் சைக்கிளில் வந்த இனந்தெரியாத நபர்களே இவ்வாறு கொள்ளையடித்து சென்றுள்ளனர் எனத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

அச்சுவேலி நாவற்காடு வீதியில் உள்ள பாடசாலையொன்றுக்கு அருகிலேயே இச்சம்பவம் இடம்பெற்றுள்ளது.

இதன்போது

11

## வடக்குக்கு மிக அருகே உருவாகும் தாழமுக்கம்

யாழ்ப்பாணம், டிசெ. 12

வடக்கு மாகாணத்திற்கு மிக அண்மையாக புதிய தாழமுக்கம் ஒன்று உருவாகும் வாய்ப்புள்ளதாக யாழ்ப்பாண பல்கலைக்கழக புவியியல் துறை மூத்த விரிவுரையாளர் நாகமுத்து பிரதீபராஜா தெரிவித்துள்ளார்.

இது தொடர்பில் அவர் மேலும் தெரிவிக்கையில்,

எதிர்வரும் 18 ஆம் திகதிக்கும் 20 ஆம் திகதிக்கும் இடைப்பட்ட காலத்தில் வடக்கு மாகாணத்துக்கு மிக அண்மையாக புதிய தாழமுக்கம் ஒன்று உருவாகும் வாய்ப்புள்ளது.

இது யாழ்ப்பாணக் குடாநாட்டுக்கு மிக அண்மையாக தோன்றும் வாய்ப்புள்ளதை மாதிரிகள் காட்டுகின்றன.

எனினும்

11

## உலக தமிழர் பேரவையினர் தமிழ் எம்.பிக்கள் சந்திப்பு

### ஹக்கீம், ஜீவனும் பங்கேற்பு

கொழும்பு, டிசெ. 12

இலங்கைக்கு வருகைத் தந்துள்ள உலகத் தமிழர் பேரவையினர், தமிழ் பாராளுமன்ற உறுப்பினர்களுடன கொழும்பில் விசேட சந்திப்பில் ஈடுபட்டனர்.

இரா.சம்பந்தனின் கொழும்பு இல்லத்தில் இந்த சந்திப்பு இடம்பெற்றது.

இந்த சந்திப்பில் தமிழ்ப் பாராளுமன்ற உறுப்பினர்களுடன், அமைச்சர் ஜீவன் தொண்டமான், முஸ்லிம் காங்கிரஸின் தலைவர் ரவூப்

11



## இப்படியும் நடக்கிறது

திடீரென்று உலகத் தமிழர் பேரவை என்ற பெயரில் ஒரு குழு தாயகத்துக்கு வந்து 'அரசியல் ஷோ' நடத்தியது பற்றி நேற்று இந்தப் பத்தியில் குறிப்பிட்டிருந்தேன்.

அந்த அமைப்பு பற்றிய எமது கருத்து சரியானதுதான் என்பதை நிரூபிக்கும் வகையில் புலம்பெயர் தமிழர்கள் மத்தியில் மிகவும் பலமுள்ள அமைப்புகளாக இயங்கிக் கொண்டிருக்கும் ஆறு அமைப்புகள் இந்த முயற்சிக்கு எதிர்வினையாற்றி அறிக்கை ஒன்றை வெளியிட்டிருந்ததை வாசகர்கள் கவனித்திருப்பார்கள்.

உலகத் தமிழர் பேரவை என்பது சுமார் பதினான்கு அமைப்புகள் சேர்ந்த ஒரு கூட்டமைப்பு. அதில் பிரித்தானிய தமிழர் பேரவையும் ஓர் அங்கம். அந்த அமைப்பின் பிரதிநிதியாகவே சுரேன் சுரேந்திரன் அதில் இடம்பெற்றிருந்தார்.

அந்த அமைப்பில் இடம்பெற்றிருந்த எந்த ஓர் அமைப்பும் இவர்களின் இந்த முயற்சிக்கு ஆதரவு வழங்கவில்லை என்பது இப்போது வெளிச்சத்துக்கு வந்திருக்கின்றது.

நாம் இங்கே நேற்று எழுதியதுபோல இது ஒரு தனிப்பட்டவர்களின் கூட்டு முயற்சிதான். அதன் பின்னால் இருந்து இயக்குபவர் யார் என்பதும் அவர் எதற்காக இப்படி மறைந்திருந்து இதனைச் செய்கிறார் என்பதும் விரைவில் வெளிச்சத்துக்கு வரும்தானே. 'மலிந்தால் சந்தைக்கு வரும்' என்பதுபோல...

உலகத் தமிழர் பேரவை என்பது விடுதலைப் புலிகளின் இலக்கை அடையும் நோக்கோடு, தொடர்ந்து புலம்பெயர் மண்ணில் இயங்குகின்ற அமைப்பு என்பதுதான், சிங்கள மக்கள் மத்தியில் மட்டுமன்றி சிங்கள ஊடகப்பரப்பிலும் நம்பப்படும் ஒரு சங்கதி. அந்த அமைப்பு புலிகளின் கொள்கையைக் கைவிட்டு பல வருடங்கள் ஆகிவிட்டன என்பது சிங்கள ஊடகங்களுக்கு தெரிந்திருக்கவில்லையா அல்லது தெரிந்தும் தெரியாமல் இருக்கிறார்களா என்பது தெரியவில்லை.

ஆனால், ஒரு நண்பர் கேட்டார், அவர்கள் மல்வத்தை பீடாதிபதியைச் சந்தித்தபோது, 'அதற்காக மன்னிப்புக்கேட்டார்களா?' என்று.

தலதா மாளிகைமீது புலிகள் தாக்குதல் நடத்தியபோதும், புலிகளை ஆதரித்த அவர்கள், மல்வத்தை பீடாதிபதியைச் சந்தித்தபோது அதற்காக மன்னிப்புக்கோரி அல்லவா இருக்க வேண்டும் என்ற அவரின் கோரிக்கை நியாயமானதுதான்.

ஆனாலும் அவருக்கு நான் சொன்னேன், 'மல்வத்தை பீடாதிபதியே அப்படி தாக்குதல் நடத்திய புலிகளின் தலைவரை வன்னிக்கு சென்று சந்திக்க விரும்பினார் என்று சொன்ன பிறகு எதற்காக அவர்கள் மன்னிப்பு கேட்க வேண்டும்' என்று.

அதுவல்ல இன்று நான் சொல்ல வருவது.

இவர்களுடன் நேபாளத்தில் வைத்து இமாலய பிரகடனம் என்ற பெயரில் பிரகடனத்தை வெளியிட்ட பௌத்த தேரர்கள் பற்றி அறிந்துகொள்ள கொழும்பில் கடும் சிங்கள - பௌத்த மதவாதியான ஒருவரிடம் விசாரித்தேன். அவர் எனக்கு பதில் சொல்ல முன்னதாக புலம்பெயர்ந்த தமிழர்கள் குழு பற்றி, அதாவது தற்போது இலங்கையில் சுற்றுப்பயணம் செய்யும் குழு பற்றி முதலில் அறிந்துகொள்ள விரும்பினார்.

நான் அவர்கள் பற்றியும் அவர்களுக்கு புலம்பெயர்ந்த தமிழர்கள் மத்தியில் இருக்கும் 'செல்வாக்கு' பற்றியும் விபரமாக எடுத்துக்கூற வேண்டியதாயிற்று.

உலகத் தமிழர் பேரவை என்பது பல அமைப்புகளின் கூட்டு, ஆனால் இவர்களோ, அந்த அமைப்புகளில் பணியாற்றிய தனிப்பட்ட சிலர், அவர்கள் இப்போது அந்த அந்த அமைப்புகளில் இல்லை" என்றேன்.

விபரமாக கூறியபின்னர் அவர் கேட்டார், 'அப்படியெனில் இவர்கள் புலம்பெயர் தமிழர்களை பிரதிநிதித்துவப்படுத்தவில்லை என்கிறீர்களா?' என்று.

'நான் அதைத்தானே இவ்வளவு நேரமும் சொன்னேன்' என்றதும் அவர் சொன்னார், 'இவர்களுடன் பிரகடனம் வெளியிட்ட தேரர்களும் இவர்களைப் போலத்தான். அவர்கள் எல்லாம் என். ஜி. ஓ. தேரர்கள். பௌத்த மதபீடங்களில் செல்வாக்கு செலுத்த முடியாதவர்கள்'.

சரியான ஒற்றுமைதான் என்பதை அப்போது புரிந்துகொள்ள முடிந்தது.!

**- ஊர்க்குருவி.**

# மதுபானத்தை காட்டி எங்கள் பிரதேசங்களுக்கு சுற்றுலா பயணிகளை அழைக்க வேண்டியதில்லை

## வட மாகாண சபை முன்னாள் உறுப்பினர் சுகிர்தன்

வடமராட்சி, டிசெ. 12

வடக்கு - கிழக்கில் சுற்றுலாவை விருத்தி செய்ய வேண்டுமானால் சுற்றுலா மையங்கள் அபிவிருத்தி செய்யப்பட வேண்டும். மதுபானத்தை காட்டி எங்கள் பிரதேசங்களுக்கு சுற்றுலா பயணிகளை கொண்டு வர வேண்டிய தேவை இல்லை என வடக்கு மாகாண சபையின் முன்னாள் உறுப்பினர் ச.சுகிர்தன் தெரிவித்தார்.

வடமராட்சி - உடுப்பிட்டி பகுதியில் மக்களின் எதிர்ப்பை மீறி மீளவும் மதுபானசாலைக்கு அனுமதி வழங்கப்பட்டமை தொடர்பில் நேற்று அவர் வடமராட்சி ஊடக இல்லத்தில் நடத்திய செய்தியாளர் சந்திப்பிலேயே இதனைத் தெரிவித்தார்.

மேலும், உடுப்பிட்டியில் மக்கள் செறிவுள்ள பகுதியில் சில மாதங்களுக்கு முன் மதுபான விற்பனை நிலையம் அமைக்கப்பட்டது. இதற்கு எதிராக மக்கள் பெருமளவில் போராட்டம் செய்தபோது பொது மக்களின் எதிர்ப்பை கருத்திற்கொண்டு மதுபான விற்பனை நிலையத்தின் அனுமதி தற்காலிகமாக இரத்து செய்யப்பட்டு மூடப்பட்டது.

ஆனால், தற்போது சில நாட்களாக மதுபான விற்பனை நிலையம் திறந்து வியாபாரத்தில் ஈடுபடுகிறது. உடுப்பிட்டி அமெரிக்கன் மிஷன் கல்லூரி, உடுப்பிட்டி மகளிர் கல்லூரி இமையாணன் இ.த.க பாடசாலை, நவிண்டில் தாமோதரா பாடசாலை என்பன குறித்த மதுபானசாலைக்கு மிகக் குறைந்த தூரத்திலிருக்கின்றன.

இதுதொடர்பாக கரவெட்டி பிரதேச செயலாளரை பொது அமைப்புகள் தொடர்பு கொண்ட போது நேரடியாகவும் வாய் மொழி மூலமாகவும் மாவட்ட ஒருங்கிணைப்புக் குழுத் தலைவர் தனக்கு அறிவுறுத்தியதனால் தான் இடத்துக்கான சிபாரிசை வழங்கியதாக குறிப்பிட்டுள்ளார்.

இதனடிப்படையில் சமூகமட்ட அமைப்புகளின் பிரதிநிதிகள் மாவட்ட ஒருங்கிணைப்பு குழுத் தலைவரை சந்தித்து கலந்துரையாடி மகஜரை கையளிக்க முடிவு செய்துள்ளன. ஆறு வருடங்களுக்கு முன்னரும் மதுபான விற்பனை நிலையம் அமைக்கப்பட்டு பல சமூக சீரழிவுகள் ஏற்பட்டதால் பொது மக்கள் போராட்டம் செய்து மதுபான விற்பனை நிலையம் அகற்றப்பட்டது.

இரண்டாம் தடவையாக கொண்டுவர முயற்சித்தும் அது முடியாத நிலையில் மூன்றாவது தடவையாக திறக்கப்பட்ட மதுபான நிலையம் மக்கள் எதிர்ப்பால் மூடப்பட்ட போது மாவட்ட ஒருங்கிணைப்புக் குழு தலைவர் அதில் தலையிட்டு அதை திறந்து வைக்க உத்தரவிட்டார். இதனை ஏற்றுக் கொள்ள முடியாது - என்றார்.

(ஐ-02)

# போலி துப்பாக்கியுடன் கொள்ளையிட தயாரான நிலையில் நால்வர் கைது!

கொழும்பு, டிசெ. 12

போலி இராணுவ அடையாள அட்டை மற்றும் போலி துப்பாக்கியுடன் கொள்ளை சம்பவமொன்றுக்கு தயாரான நால்வர் கைது செய்யப்பட்டுள்ளனர்.

அம்பத்தளை - சேதவத்தை வீதியில் புதிய களனி பாலத்திற்கு அருகில் பொலிஸ் விசேட அதிரடிப் படையினர் சந்தேகத்துக்கு இடமான இரண்டு மோட்டார் சைக்கிள்களை சோதனையிட்டுள்ளனர்.

அதன்போது சந்தேகநபர் ஒருவரிடமிருந்து போலி துப்பாக்கி மற்றும் அவரது கைபேசியிலிருந்து போலி இராணுவ அடையாள அட்டை என்பன கண்டுபிடிக்கப்பட்டுள்ளன.

மேலதிக விசாரணையில் குறித்த சந்தேக நபர்கள் கொள்ளையிடும் நோக்கில் பயணித்தமை தெரியவந்தது.

# ஒப்பந்தகாரர்களுக்கு ரூ. 198 கோடி இம்மாத இறுதிக்குள் வழங்கப்படும்!

கொழும்பு, டிசெ. 12

தமது அமைச்சினால் ஒப்பந்தகாரர்களுக்கு வழங்கப்படவிருந்த 1,989 மில்லியன் ரூபாய் இந்த மாத இறுதிக்கு முன்னர் வழங்கப்படவுள்ளதாக நகர அபிவிருத்தி மற்றும் வீடமைப்பு அமைச்சர் பிரசன்ன ரணதுங்க தெரிவித்துள்ளார்.

கொரோனா தொற்று மற்றும் பொருளாதார நெருக்கடி காரணமாக குறித்த கொடுப்பனவுகள் நிலுவையில் இருந்து வந்தது.

இதற்கு மேலதிகமாக, இந்த வருடம் மேற்கொள்ளப்பட்ட அபிவிருத்திப் பணிகளுக்காக ஒப்பந்ததாரர்களுக்கு வழங்கப்பட வேண்டிய 1,112 மில்லியன் ரூபாய் கொடுப்பனவையும் இந்த வருட இறுதிக்குள் முழுமையாக வழங்குவதற்கு திட்டமிடப்பட்டுள்ளதாக அமைச்சர் குறிப்பிட்டார்.

அத்துடன், நிர்மாணத்துறைக்கு பிரத்தியேகமாக புதிய அபிவிருத்தி வங்கியொன்றை ஸ்தாபிப்பதற்கான யோசனை முன்வைக்கப்பட்டுள்ளதாகவும் அமைச்சர் பிரசன்ன ரணதுங்க மேலும் தெரிவித்தார்.

(அ)

# வெளிநாட்டு பெண்ணிடம் கொள்ளையிட்ட சந்தேகநபர்கள் கைது

கொழும்பு, டிசெ. 12

சுற்றுலா பயணம் மேற்கொண்டு இலங்கை வந்திருந்த பங்களாதேஷ் பெண் ஒருவரிடம் தங்க நகைகள் கொள்ளையிடப்பட்ட சம்பவம் தொடர்பில் சந்தேகத்தின் பேரில் இருவர் பொலிஸாரால் கைது செய்யப்பட்டனர்.

குறித்த பெண் நடந்து சென்றுகொண்டு இருக்கையில் சந்தேக நபர்களான இருவரும் தங்க நகைகளை கொள்ளையிட்டு தப்பிச் சென்றுள்ளனர்.

பின்னர் இவர்கள் கொழும்பு செட்டித்தெருவிலுள்ள நகை கடை ஒன்றில் குறித்த நகையை விற்பனை செய்து 2 இலட்சத்து 25 ஆயிரம் ரூபாய் பணத்தை பெற்றுள்ளனர் என்று பொலிஸார் தெரிவித்தனர்.

இந்த சம்பவம் தொடர்பில் வழங்கப்பட்ட முறைப்பாட்டின் அடிப்படையில், சி. சி. ரீ. வி. கமெரா காட்சிகளின் அடிப்படையில் சந்தேக நபர்கள் கைது செய்யப்பட்டனர்.

சந்தேக நபர் இருவரும் அதிக போதைப்பொருளுக்கு அடிமையானவர்கள் என்பது விசாரணையில் தெரியவந்துள்ளது.

(அ)

# கஞ்சாவுடன் ஒருவர் கைது

கொழும்பு, டிசெ. 12

பேலியகொடை பொலிஸ் பிரிவுக்கு உட்பட்ட பகுதியில் கேரளா கஞ்சாவுடன் சந்தேக நபர் ஒருவர் நேற்றுமுன்தினம் பேலியகொடை பொலிஸாரால் கைது செய்யப்பட்டுள்ளார்.

கைது செய்யப்பட்டவர் பேலியகொடை பிரதேசத்தை சேர்ந்த 45 வயதுடையவராவார்.

பொலிஸாருக்கு கிடைத்த தகவலின் மேற்கொள்ளப்பட்ட சோதனையில் சந்தேக நபர் கைது செய்யப்பட்டுள்ளார்.

சோதனையில் 2 கிலோ கிராம் நிறையுடைய கேரளா கஞ்சா பொலிஸாரால் கைப்பற்றப்பட்டது.

மேலதிக விசாரணைகளை பொலிஸார் மேற்கொண்டு வருகின்றனர்.

**யாழ்.கச்சேரிக்கு அருகில் காணி உடன் விற்பனைக்கு**

யாழ்ப்பாணம் கச்சேரிக்கு அருகில் 3½ பரப்புக் காணி, இரண்டு வெட்டுக் கிணறுகளுடன் உடன் விற்பனைக்குண்டு. இந்தக் காணி சுண்டுக்குழி தபால் நிலையத்துக்கு அருகில் - கச்சேரி நல்லூர் வீதியில் அமைந்துள்ளது. 55 மில்லியனுக்கு (5 கோடியே 50 லட்சம்) மேலான விலை எதிர்பார்க்கப்படுகிறது.

தொடர்புகளுக்கு : +447963743585 (Whatapp),
0212227141(Sri Lanka)
E.mail : Jamesraj_uk@yahoo.co.uk

ஈழநாடு
Eelanadu
12.12.2023 செவ்வாய்க்கிழமை
சோபகிருது வருடம், கார்த்திகை 26

**"ஏசுவார்கள், எரிப்பார்கள், அஞ்சவேண்டாம்**
**உண்மையை எழுதுங்கள்; உண்மையாய் எழுதுங்கள்"**
- யோகர் சுவாமிகள்.

E-mail: eelanaduweekly@gmail.com
தொலைபேசி : 021 205 2300

# இந்தியாவின் பாதுகாப்பு

"இந்தியாவின் பாதுகாப்பும் இலங்கையின் பாதுகாப்பும் பின்னிப் பிணைந்த ஒன்று", என்று இலங்கைக்கான இந்திய தூதுவர் கோபால் பாக்லே தெரிவித்திருக்கின்றார். இந்து சமுத்திர பிராந்தியத்தில் அமைந்திருக்கும் நாடுகள் என்னும் அடிப்படையில் பாதுகாப்பு விவகாரங்களில் ஏற்படும் பிணக்குகளை சரி செய்வதற்கு இரண்டு நாடுகளுமே இணைந்து செயல்பட வேண்டியிருப்பதாகவும் அவர் தெரிவித்திருக்கின்றார்.

இலங்கை ஓர் உடனடி அயல்நாடு என்னும் வகையில் இலங்கையின் வெளிவிவகார அணுகுமுறைகள் இந்தியாவின் அதிக கரிசனைக்கு உரியவையாகும். குறிப்பாக, சீனாவின் யுத்த மற்றும் உளவுக் கப்பல்கள், ஆராய்ச்சி என்னும் பெயரில் இலங்கைக்குள் பிரவேசிப்பதானது எப்போதுமே சிக்கலானதுதான். ஆனால், இலங்கையின் ஆட்சியாளர்களோ இந்த விடயத்தில் கூடுதல் அக்கறை எடுத்துக்கொள்வதாக தெரியவில்லை. 'நடுநிலை வெளிவிவகாரக் கொள்கை' - என்னும் அடிப்படையில் சீனாவின் உள்நுழைவுக்கும் செங்கம்பளம் விரிக்கும் நடவடிக்கைகளையே கொழும்பு முன்னெடுத்து வருகின்றது.

வடக்குக்குள் சீனாவின் உள்நுழைவிலுள்ள நீண்டகால சிக்கல்கள் தொடர்பில் தமிழ்த் தேசிய கட்சிகளின் தலைவர்கள் எச்சரித்து வருகின்றனர். சீனாவானது அரசாங்க திட்டங்களின் ஊடாகவே, வடக்கு - கிழக்குக்குள் உள்நுழைய முயற்சிக்கின்றது. குறிப்பாக வடக்கின் மீன்பிடித் துறையில் சீனா முதலீடுகளை செய்வதும் அதற்கான முயற்சிகளை முன்னெடுப்பது தொடர்பில் வடபுல மீனவர் அமைப்புகள அச்சம் கொண்டுள்ளன. அவர்கள் பல்வேறு சந்தர்ப்பங்களில் தங்களின் அச்சங்களை வெளிப்படுத்தியிருக்கின்றனர்.

சீனாவுக்கு அருகிலுள்ள பிலிப்பைன்ஸ் நாட்டில் இடம்பெற்றுள்ள ஒரு விடயமானது சீனா தொடர்பான அச்சங்களை நியாயப்படுத்துகின்றது. அதாவது, பிலிப்பைன்ஸ் கடல் எல்லைக்குள் ஊடுருவிய, சீனாவின் கடல் (மீன் பிடி) இராணுவ பிரிவு மற்றும் கடலோர காவல் படையினர் பிலிப்பைன்ஸ் மீன்பிடி படகுகள்மீது தாக்குதல்களை மேற்கொண்டன என்று கூறியிருக்கின்றது. பிலிப்பைன்ஸ் வெளிவிவகார அமைச்சு இது தொடர்பில் விளக்கம்கோரி, விசாரணைக்கு அழைத்திருக்கின்றது. சீனாவின் அத்துமீறல்கள் தொடர்ந்தும் பிலிப்பைன்ஸ் மீன்பிடி படகுகள் மற்றும் கப்பல்கள் அச்சுறுத்தலுக்கு உள்ளாகின்றன என்று பிலிப்பைன்ஸ் கூறுகின்றது.

மீன்பிடிக்கான இராணுவப் பிரிவை ஒரு தனிப் படைப் பிரிவாக வைத்திக்கும் ஒரேயொரு நாடு சீனா மட்டும்தான். இந்தநிலையில் சீனா வடக்கின் மீன்பிடித் துறைக்குள் முதலீடுகளை செய்ய முற்படுவதை எச்சரிக்கையுடன்தான் நோக்க வேண்டும். இந்த பின்புலத்தில், அண்மையில், தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் மூத்த தலைவர்களான சித்தார்த்தன் மற்றும் செல்வம் அடைக்கலநாதன் ஆகியோர் வடக்கு மாகாணத்துக்குள் சீனாவை அனுமதிப்பதிலுள்ள நீண்டகால சவால்கள் தொடர்பில் குறிப்பிட்டிருந்தனர். தமிழரின் பாரம்பரிய வாழ்விடங்களுக்குள் சீனாவை தேவையற்ற வகையில் அனுமதிப்பதானது நீண்டகால அடிப்படையில புவிசார் அரசியல் பதற்றங்களை ஏற்படுத்துமென்று எச்சரித்திருந்தனர். அவர்களின் பார்வையில் தவறில்லை.

இலங்கை அரசாங்கமோ - நடுநிலை என்று கூறிக்கொண்டு, சமவேளையில், சீனாவையும் இந்தியாவையும் கையாள முடியுமென்று எண்ணுகின்றது. இது அபத்தானது. ஏனெனில், பனிப்போர் காலத்தை கையாளுவதில் ரணிலின் மாமனார், ஜே. ஆர். ஜெயவர்த்தனவின் தவறுகள் ஒரு படிப்பினையாகும். அன்றைய பனிப்போர் அரசியல் ஒழுங்கு தற்போது வேறு வடிவம் கொண்டிருக்கின்றது. இதில் அடிப்படையானது சர்வாதிகார சீனாவின் எழுச்சியாகும். இந்த நிலைமையை இலங்கை கருத்தில் கொண்டு செயல்படுகின்றதா என்பதில் சந்தேகங்கள் உண்டு. வடக்கு - கிழக்கை அடிப்படையாகக் கொண்டு, இந்த விடயத்தில் தமிழ்த் தேசிய தரப்புகள் எப்போதும் கவனமாக இருக்க வேண்டும்.

# கராப்பிட்டிய அனர்த்தத்தில் மேலும் ஒருவர் உயிரிழப்பு!

கொழும்பு, டிசெ. 12

காலி - கராப்பிட்டிய பகுதியில் கட்டுமான தளமொன்றுக்கு அருகில் ஏற்பட்ட அனர்த்தத்தில் காயமடைந்து வைத்தியசாலையில் சிகிச்சை பெற்றுவந்த மேலும் ஒருவர் உயிரிழந்தார்.

கடந்த சனிக்கிழமை காலி - கராப்பிட்டிய பகுதியில் கட்டுமான தளமொன்றுக்கு அருகில் மண்மேடு சரிந்து வீழ்ந்ததில் ஒருவர் உயிரிழந்த நிலையில் ஏனைய 3 பேர் கராபிட்டிய வைத்தியசாலையில் சிகிச்சை பெற்று வந்தனர்.

இந்நிலையில், குறித்த சம்பவத்தில் காயமடைந்து சிகிச்சை பெற்றுவந்த மூவரில் ஒருவர் நேற்று உயிரிழந்தார்.

இதன்படி குறித்த அனர்த்தத்தில் உயிரிழந்தவர்களின் எண்ணிக்கை இரண்டாக அதிகரித்துள்ளது. (அ)

# சிற்றுண்டிகளின் விலைகள் உயரும்

கொழும்பு, டிசெ. 12

மீண்டும் உணவகங்களில் சிற்றுண்டி உள்ளிட்ட இதர உணவுகளின் விலையை உயர்த்த வேண்டும் என அகில இலங்கை உணவக உரிமையாளர்கள் சங்கம் தெரிவித்துள்ளது.

முட்டை, இறைச்சி, மீன், சீனி மற்றும் கீரி சம்பா அரிசி போன்றவற்றின் விலைகள் அதிகரிப்பே சிற்றுண்டிகளின் விலைகள் அதிகரிக்கப்பட காரணம் என்று என்றும் தெரிவிக்கப்பட்டது.

# அநுராதபுரம், களுத்துறை மாணவிகளிடம் போதை மாத்திரைப் பாவனை அதிகரிப்பு

கொழும்பு, டிசெ. 12

அநுராதபுரம் மற்றும் களுத்துறை மாவட்டங்களில் பாடசாலை மாணவிகள் மத்தியில் போதை மாத்திரை பாவனை அதிகரித்துள்ளதாக தெரிவிக்கப்படுகின்றது.

இராணுவப் புலனாய்வுப் பிரிவுக்கு கிடைத்த தகவலின்படி, அநுராதபுரத்தில் உள்ள மருந்தகம் ஒன்றில் மேற்கொள்ளப்பட்ட சுற்றிவளைப்பின் போது இந்தத் தகவல் தெரியவந்துள்ளது.

குறித்த மருந்தகத்திலிருந்து ஆயிரத்துக்கும் மேற்பட்ட போதை மாத்திரைகள் கைப்பற்றப்பட்டன. அத்துடன், சந்தேக நபர் ஒருவரும் கைது செய்யப்பட்டுள்ளார்.

அநுராதபுரம் மாவட்டத்தில் பாடசாலை மாணவிகள் மத்தியில் போதை மாத்திரை பாவனை அதிகரித்துள்ளதாக இதன்போது மேற்கொள்ளப்பட்ட விசாரணைகளில் தெரியவந்துள்ளது.

அத்துடன், போதைப் பொருள் வாங்குவதற்காக பாடசாலை மாணவிகள் முறையற்ற விதத்தில் பணம் ஈட்டியுள்ளதாகவும் கண்டறியப்பட்டுள்ளது.

அத்துடன், அநுராதபுரத்தில் நேற்று முன் தினம் இடம்பெற்ற செய்தியாளர் சந்திப்பில் கலந்துகொண்டு கருத்து தெரிவித்த இலங்கை ஆசிரியர் சங்கத்தின் தலைவர் பிரியந்த பெர்னாண்டோ, களுத்துறை மாவட்டத்தில் பாடசாலை மாணவிகள் மத்தியிலும் போதை மாத்திரை பாவனை அதிகரித்துள்ளதாக அதிபர்கள் தம்மிடம் தெரிவித்ததாக குறிப்பிட்டுள்ளார். (அ)

# நுரைச்சோலை மின்பிறப்பாக்கி மின் கட்டமைப்பில் இணைப்பு

கொழும்பு, டிசெ. 12

பராமரிப்பு பணிகள் காரணமாக செயலிழந்த நுரைச்சோலை லக்விஜய மின் நிலையத்தின் மூன்றாவது மின் பிறப்பாக்கி இயந்திரம் தேசிய மின் கட்டமைப்பில் இணைக்கப்படவுள்ளதாக இலங்கை மின்சார சபை தெரிவித்துள்ளது.

இதன்படி நேற்று 300 மெகாவோட் மின்சாரம் தேசிய மின் கட்டமைப்பில் இணைக்கப்பட்டதாக இலங்கை மின்சார சபையின் ஊடகப் பேச்சாளர் நோயல் பிரியந்த தெரிவித்தார்.


நாடளாவிய ரீதியில் கடந்த சனிக்கிழமை ஏற்பட்ட மின்சார தடையை அடுத்து, நுரைச்சோலை அனல் மின் நிலையத்தின் முதலாவது மின் பிறப்பாக்கி இயந்திரமும் செயலிழந்தது.

இந்தநிலையில், இரண்டாவது மின் பிறப்பாக்கி இயந்திரம் மாத்திரமே இயங்கி வந்தது.

இந்த நிலையில், மூன்றாவது மின்பிறப்பாக்கி இயந்திரம் பராமரிப்பு பணிகளின் பின்னர், மின் உற்பத்திக்கு தயார் நிலையில் உள்ளதாக மின்சார சபையின் ஊடகப் பேச்சாளர் நொயல் பிரியந்த தெரிவித்தார்.

இதனூடாக, 300 மெகாவோட் மின்சாரம் தேசிய மின்கட்டமைப்பில் நேற்று இணைக்கப்பட்டது என அவர் குறிப்பிட்டார். (அ)

# அப்புக்குட்டி அண்ணையின் 'டவுட்'






**மேடம்**
சந்திராஷ்டமம் இருப்பதால் சில காரியங்களை போராடி முடிப்பீர்கள். வியாபாரத்தில் வேலையாட்களால் டென்ஷன் அதிகரிக்கும். அதிகாரிகளிடம் அளவாக பழகுங்கள். நிதானம் தேவைப்படும்.

**இடபம்**
உங்களின் அறிவாற்றலை வெளிப்படுத்த நல்ல வாய்ப்புகள் வரும். வியாபாரத்தில் புது சலுகைகளை அறிவிப்பீர்கள். பெரிய பொறுப்புகள் தேடி வரும். எதிர்பாராத நன்மை உண்டாகும் நாள்.

**மிதுனம்**
பணப்புழக்கம் அதிகரிக்கும். பழைய உறவினர்கள் நண்பர்கள் தேடி வந்து பேசுவார்கள். வியாபாரத்தில் லாபம் ஈட்டுவீர்கள். அதிகாரிகளுக்கு நெருக்கமாவீர்கள். தொட்டது துலங்கும் நாள்.

**கடகம்**
புதிய சிந்தனைகள் மனதில்தோன்றும். பிள்ளைகளின் தனித்திறமைகளை கண்டறிவீர்கள். உத்தியோகத்தில் அதிகாரிகள் வலிய வந்து உதவுவார்கள். கனவு நனவாகும் நாள்.

**சிம்மம்**
எதிர்ப்புகள் அடங்கும். நீண்டநாட்களாக தள்ளிப் போன காரியங்கள் முடியும். தொழிலில் லாபம் அதிகரிக்கும். மறுக்கப்பட்ட உரிமைகள் கிடைக்கும். தேவைகள் பூர்த்தியாகும் நாள்.

**கன்னி**
உங்கள் பேச்சில் அனுபவ அறிவு வெளிப்படும். சகோதரர்களால் பயனடைவீர்கள். வியாபாரத்தில் சில நுணுக்கங்களை கற்றுக் கொள்வீர்கள். உத்தியோகத்தில் உங்கள் கை ஓங்கும். தைரியம்கூடும்.

**துலாம்**
கடந்த இரண்டு நாட்களாக குடும்பத்தில் இருந்து வந்த கூச்சல் குழப்பங்கள் விலகும். வியாபாரத்தில் சூழ்ச்சிகளை முறியடிப்பீர்கள். திருப்தி உண்டாகும். புத்துணர்ச்சி பெருகும் நாள்.

**விருட்சிகம்**
ராசிக்குள் சந்திரன் இருப்பதால் சிலர் உங்களை சீண்டிப் பார்ப்பார்கள். வியாபாரத்தில் வேலையாட்களிடம் தட்டிக்கொடுத்து வேலை வாங்குவது நல்லது. விழிப்புடன் செயல்படவேண்டிய நாள்.

**தனுசு**
எதிலும் அவசர முடிவுகள்எடுக்க வேண்டாம். வியாபாரத்தில் புது முதலீடு செய்யலாம். உத்தியோகத்தில் சக ஊழியர்களை அனுசரித்துப் போங்கள். பொறுமை தேவைப்படும் நாள்.

**மகரம்**
அதிரடியான சில முக்கியமுடிவுகள் எடுப்பீர்கள். வியாபாரத்தில் வேலையாட்கள் கடமையுணர்வுடன் செயல்படுவார்கள். உயரதிகாரிகள் உங்களை மதித்துப் பேசுவார்கள். இனிமையான நாள்.

**கும்பம்**
தன்னம்பிக்கையுடன் பொது காரியங்களில் ஈடுபடுவீர்கள். வீடு வாகனத்தை சீர் செய்வீர்கள். வியாபாரம் சூடுபிடிக்கும். சக ஊழியர்களின் ஆதரவு கிட்டும். ஆதரவு பெருகும் நாள்.

**மீனம்**
கணவன்-மனைவிக்குள் இருந்த மோதல்கள் விலகும். புண்ணிய தலங்கள் சென்று வருவீர்கள். வியாபாரத்தில் ஏற்பட்ட இழப்புகளை சரி செய்வீர்கள். நிம்மதி உண்டு. உற்சாகமான நாள்.

# வங்கக் கடலில் மீன்பிடிப்பதை சட்டபூர்வ உரிமையாக்குங்கள்!

## பாட்டாளி மக்கள் கட்சி வலியுறுத்து

**சென்னை, டிசெ. 12**

**“வங்கக் கடலில் பாரம்பரியமாக தமிழக மீனவர்கள் மீன்பிடித்து வரும் பகுதிகளில் இவர்கள் தொடர்ந்தும் மீன்பிடிப்பது சட்டபூர்வ உரிமையாக்கப்பட வேண்டும். இது தொடர்பாக இலங்கை அரசுடன் மத்திய அரசு பேச்சு நடத்த வேண்டும். இலங்கை சிறைகளில் வாடும் அனைத்து மீனவர்களையும், இலங்கை அரசிடம் உள்ள அனைத்து படகுகளையும் மீட்க மத்திய, மாநில அரசுகள் நடவடிக்கை எடுக்க வேண்டும்” என்று பாட்டாளி மக்கள் கட்சியின் தலைவர் அன்புமணி ராமதாஸ் வலியுறுத்தியுள்ளார்.**

இதுதொடர்பாக தனது எக்ஸ் வலைதளத்தில் அவர் வெளியிட்டுள்ள பதிவில்,

‘‘நாகை மீன்பிடி துறைமுகத்தில் இருந்து வங்கக்கடலுக்கு மீன்பிடிக்கச் சென்ற நாகப்பட்டினம் மற்றும் புதுவை காரைக்கால் மாவட்டங்களைச் சேர்ந்த 25 மீனவர்களை கைது செய்துள்ள இலங்கை கடற்படை அவர்களின் இரு படகுகளையும் பறிமுதல் செய்துள்ளது. தனுஷ்கோடி அருகே இராமேஸ்வரம் மீனவர்களின் விசைப்படகு மீது தங்களின் படகை மோதி சேதப்படுத்தியுள்ளது சிங்கள கடற்படை. இத்தாக்குதலில் சேதமடைந்த படகில் இருந்த 5 மீனவர்கள் நல்வாய்ப்பாக உயிர் பிழைத்துள்ளனர். சிங்கள கடற்படையினரின் இத்தகைய அத்துமீறல்கள் கண்டிக்கத்தக்கவை.

தமிழக மீனவர்களின் வாழ்வாதாரத்தை அழிக்க வேண்டும் என்ற ஒற்றை நோக்கத்துடன் தான் அவர்களை சிங்கள கடற்படை கைது செய்து வருகிறது என்பதை பலமுறை சுட்டிக் காட்டியிருக்கிறேன். இதை உணர்ந்து இந்த சிக்கலுக்கு நிரந்தரத் தீர்வு காண நடவடிக்கை எடுப்பதற்கு பதிலாக மத்திய அரசுக்கு தமிழக முதல்வர் கடிதங்களை மட்டும் எழுதிக் கொண்டிருப்பது போதாது. அதனால் எந்த பயனும் ஏற்படாது.

வங்கக்கடலில் பாரம்பரியமாக தமிழக மீனவர்கள் மீன்பிடித்து வரும் பகுதிகளில் தொடர்ந்து தமிழக மீனவர்கள் மீன்பிடிப்பது சட்டபூர்வ உரிமையாக்கப்பட வேண்டும். இது தொடர்பாக இலங்கை அரசுடன் மத்திய அரசு பேச்சு நடத்த வேண்டும் - என்று வலியுறுத்தினார். (ஐ)

**காஷ்மீருக்குசிறப்பு அந்தஸ்து நீக்கம்**

# மோடியின் நிலைப்பாடு சரி என்பதை உயர்நீதிமன்றம் உறுதி செய்துள்ளது!

## தமிழக பா. ஜ. க. தலைவர்

சென்னை, டிசெ. 12

ஜம்மு-காஷ்மீர் மாநிலத்துக்கு சிறப்பு அந்தஸ்து வழங்கிய அரசமைப்பு சட்டம் 370-வது பிரிவு இரத்து செய்யப்பட்டதை எதிர்த்து தொடரப்பட்ட வழக்கில் இந்திய உச்ச நீதிமன்றம் நேற்று தீர்ப்பு வழங்கியது.

அரசமைப்பு சட்டப்பிரிவு 370ஐ இரத்து செய்து குடியரசுத் தலைவர் பிறப்பித்த உத்தரவை உச்ச நீதிமன்றம் உறுதி செய்துள்ளது. இந்த தீர்ப்பு குறித்து அரசியல் கட்சி தலைவர்கள் தங்கள் கருத்துகளை பகிர்ந்து வருகின்றனர்.

பா. ஜ. கவின் தமிழக தலைவர் அண்ணாமலை கூறியிருப்பவை வருமாறு,

ஜம்மு - காஷ்மீர் மாநிலத்துக்கு ஒரு தனி அரசமைப்பு, மாநிலக் கொடி மற்றும் மாநில நிர்வாக சுயாட்சியை வழங்கிய அரசமைப்பு சட்டப்பிரிவு 370ஐ 2019இல் இரத்து செய்வதற்கான வரலாற்று முடிவை நமது பிரதமர் நரேந்திர மோடி எடுத்தார். சியாமா பிரசாத் முகர்ஜியின் “ஒரே தேசம், ஒரே கொடி” என்ற கொள்கையை நிறைவேற்றும் வகையில் இந்த முடிவை எடுத்தார்.

பிரிவினைவாத சக்திகள் நீண்ட காலமாக அமைதியின்மையை உருவாக்குவதற்கு ஒரு வாய்ப்பாக இந்த சட்டப்பிரிவு 370-ஐ எடுத்துக்கொண்டன. இந்த சட்டம் ரத்து செய்யப்பட்டதைத் தொடர்ந்து, காஷ்மீர் பள்ளத்தாக்கில் அமைதி திரும்பத் தொடங்கியது. மாநிலம் முதல் முறையாக வளர்ச்சியில் கவனம் செலுத்தத் தொடங்கியது.

ஆனால், சட்டப்பிரிவு 370 என்பது ஒரு தற்காலிகமானது என்று உச்ச நீதிமன்றம் இன்று (நேற்று) கூறியிருக்கிறது. இதன் மூலம் நமது பிரதமர் மோடியின் நிலைப்பாடு சரியானது என நிருபணமாகி உள்ளது -என்றார். (ஐ)

# கேள்வி கேட்ட மக்களை தாக்கிய தி. மு. க. உறுப்பினரை கைது செய்க!

## ராமதாஸ் வலியுறுத்து

சென்னை, டிசெ. 12

“மழை காலத்தில் குறை கேட்க வராதது ஏன்? எனக் கேட்டதற்காக அப்பாவி மக்கள்மீது தாக்குதல் நடத்துவதா? தி. மு. க. சட்டப்பேரவை உறுப்பினர்மீது வழக்குப் பதிந்து கைது செய்ய வேண்டும்” என பா. ம. க. நிறுவனர் ராமதாஸ் வலியுறுத்தியுள்ளார்.

பா. ம. க. நிறுவுநர் மருத்துவர் ராமதாஸ் இது குறித்து வெளியிட்டிருக்கும் அறிக்கையில்,

“சென்னை இராதாகிருஷ்ணன் நகர் தொகுதிக்குட்பட்ட கொருக்குப்பேட்டையில், மழை வெள்ளத்தால் தாங்கள் பாதிக்கப்பட்டிருந்த போது, குறைகளை கேட்க வராதது ஏன்? என்று வினா எழுப்பிய பொதுமக்களை இராதாகிருஷ்ணன் நகர் தொகுதி தி. மு. க. சட்டப்பேரவை உறுப்பினர் எபினேசரும், அவரது ஆதரவாளர்களும் கண்மூடித்தனமாக தாக்கியுள்ளனர். இத்தாக்குதலில் அப்பாவி பொதுமக்கள் பலர் காயமடைந்துள்ளனர். சட்டப்பேரவை உறுப்பினர் மற்றும் அவரது ஆதரவாளர்களின் அத்துமீறலும், தாக்குதலும் கடுமையாக கண்டிக்கத்தக்கவை.

பாதிக்கப்பட்ட மக்களின் கோபத்தை புரிந்து கொண்டு அவர்களை அமைதிப்படுத்த



சட்டப்பேரவை உறுப்பினர் முயன்றிருக்க வேண்டும். மாறாக, தமக்கு வாக்களித்து சட்டப்பேரவை உறுப்பினராக்கிய மக்கள் மீதே தாக்குதல் நடத்தியிருப்பதை ஏற்றுக்கொள்ள முடியாது. பொதுமக்களை தாக்கிய சட்டப்பேரவை உறுப்பினர் எபினேசரையும், அவரது ஆதரவாளர்களையும் கைது செய்ய வேண்டும் - என்றுள்ளது. (ஐ)

# மின்சக்தி அமைச்சர் பதவி விலகவேண்டும்!

## ஓமல்பே சோபித்த தேரர் கோரிக்கை



**கொழும்பு, டிசெ. 12**
**"மின்சக்தி மற்றும் எரிசக்தி அமைச்சரான காஞ்சன விஜே சேகரவும், அமைச்சின் செயலாளரும் உடன் பதவி விலக வேண்டும்." - என்று வலியுறுத்தியுள்ளார் கலாநிதி ஓமல்பே சோபித்த தேரர்.**

நாடளாவிய ரீதியில் ஏற்பட்ட மின்தடைக்கு பொறுப்பை ஏற்றே இவர்கள் பதவி விலக வேண்டும் எனவும் அவர் வலியுறுத்தினார்.

இது தொடர்பில் தேரர் மேலும் கூறியவை வருமாறு,

இப்படியான மின் துண்டிப்புகள் இடம்பெறக்கூடும். எனவே, உரிய ஏற்பாடுகள் அவசியம் என பொது பயன்பாட்டு ஆணைக்குழு பரிந்துரை முன் வைத்திருந்தது. எனினும், அந்த பரிந்துரை குறித்து கவனம் எடுக்கப்படவில்லை. தன்னிச்சையாக செயற்படும் அமைச்சர் மற்றும் அதிகாரிகளின் அசமந்தபோக்கு காரணமாகவே மின் தடை ஏற்பட்டுள்ளது. இது உயிர்த்த ஞாயிறு தாக்குதல் போன்ற பெரும் அநீயாயமாகும்.

அமைச்சரும், அமைச்சின் செயலாளரும் பதவி விலக வேண்டும்." - என்றார்.

அதேவேளை, மேலும் சில சிவில் அமைப்புகளின் பிரதிநிதிகளும் இந்த வலியுறுத்தலை விடுத்துள்ளனர். (அ)

# மிஹிந்தலை புனித பூமியின் பாதுகாப்பை உறுதிப்படுத்துக!

## சஜித் பிரேமதாஸ கோரிக்கை



கொழும்பு, டிசெ. 12

மிஹிந்தலை புனித பூமியின் பாதுகாப்பை உறுதிப்படுத்த நடவடிக்கை எடுக்குமாறு எதிர்க்கட்சி தலைவர் சஜித் பிரேமதாஸ வலியுறுத்தியுள்ளார்.

மிஹிந்தலை புனித ஸ்தலத்தின் விகாராதிபதி, முப்படையினர், பொலிசார் மற்றும் சிவில் பாதுகாப்பு உத்தியோகத்தர்களுடன் இணைந்து புனித ஸ்தலத்தை பாதுகாப்பதற்காக செயற்பட்டார்.

எனினும், சமீபத்தில் அந்த வளாகத்தில் இருந்த அடையாளம் தெரியாத சில நபர்களை சிவில் பாதுகாப்பு உத்தியோகத்தர்களால் பிடிக்கப்பட்டு பொலிஸாரிடம் ஒப்படைத்தனர்.

இந்நிலையில் பாதுகாப்புப் படையைச் சேர்ந்த அனைவரையும் புனித ஸ்தலத்தில் இருந்து அகற்ற அரசாங்கம் நடவடிக்கை எடுத்துள்ளது. இது தவறான தொரு நியாயமற்ற நடவடிக்கை என்றும் எதிர்க்கட்சித் தலைவர் சஜித் பிரேமதாஸ நேற்று பாராளுமன்றத்தில் தெரிவித்தார்.

மீண்டும் அந்த பாதுகாப்பை வழங்க நடவடிக்கை எடுக்குமாறு எதிர்க்கட்சித் தலைவர் பாராளுமன்றத்தில் கோரிக்கை விடுத்தார். (அ)

# பொலிஸ்மா அதிபர்-பொதுமக்கள் சந்திப்பு தினம் மீண்டும் ஆரம்பம்!

கொழும்பு, டிசெ. 12

கொவிட்- 19 வைரஸ் பரவல் காரணமாக தற்காலிகமாக இடைநிறுத்தப்பட்டிருந்த பொலிஸ்மா அதிபரின் மக்கள் சந்திப்பு தினம் எதிர்வரும் 15 ஆம் திகதி முதல் மீண்டும் ஆரம்பிக்கப்படவுள்ளதாக பொலிஸ் ஊடகப் பேச்சாளர் அலுவலகம் தெரிவித்துள்ளது.

அதன்படி ஒவ்வொரு வெள்ளிக்கிழமையும் காலை 9 மணி முதல் பொலிஸ்மா அதிபரின் மக்கள் சந்திப்பு இடம்பெறும் என அந்த அலுவலகம் அறிவித்துள்ளது.

பதில் பொலிஸ்மா அதிபர் தேசபந்து தென்னக்கோனின் அறிவுறுத்தல்களுக்கமைய, இந்த மக்கள் சந்திப்பு மீண்டும் ஆரம்பிக்கப்படவுள்ளது.

பொலிஸ் நிலையங்கள் மற்றும் விசாரணை பிரிவுகளுக்கு தனிப்பட்ட விடயங்கள் தொடர்பில் அளிக்கப்படும் முறைப்பாடுகள் குறித்து எதிர்பார்க்கப்பட்ட நிவாரணம் கிடைக்காவிடின் அல்லது காலதாமதம் ஏற்படுமாயின் அது குறித்து இதன் போது முறையிட முடியுமென அறிவிக்கப்பட்டுள்ளது. (அ)

# மிஹிந்தலை புனித பூமியின் பாதுகாப்பு அகற்றப்படவில்லை

## பிரமித பண்டார தென்னக்கோன்



கொழும்பு, டிசெ. 12

வரலாற்றுச் சிறப்புமிக்க மிஹிந்தலையின் அபிவிருத்திப் பணிகளை நிறுத்தக்கூடாது என பாராளுமன்ற உறுப்பினர் ரொஷான் ரணசிங்க பாராளுமன்றத்தில் தெரிவித்தார்.

மிஹிந்தலை பூமியில் இருந்து படையினர் அகற்றப்பட்டுள்ளதாகத் தெரிவித்த ரொஷான் ரணசிங்க, எவ்வாறான அரசியல் கருத்துக்கள் கொண்டிருந்தாலும் மகிந்த ராஜபக்ஷ காலத்தில் மிஹிந்தலையின் அபிவிருத்தி நிறுத்தப்படவில்லை எனவும் மிஹிந்தலையின் அபிவிருத்திப் பணிகளை நிறுத்த வேண்டாம் என கேட்டுக்கொள்வதாகவும் அவர் தெரிவித்தார்.

இதேவேளை, மிஹிந்தலை புனித பூமியின் பாதுகாப்பு அகற்றப்படவில்லை என பாதுகாப்பு இராஜாங்க அமைச்சர் பிரமித பண்டார தென்னக்கோன் பாராளுமன்றத்தில் தெரிவித்தார்.

பாதுகாப்பு நடவடிக்கையில் ஈடுபடுத்தப்பட்ட 250 இராணுவத்தினரை மீளப் பெறத் தீர்மானித்துள்ளதாக தெரிவித்த இராஜாங்க அமைச்சர், மிகிந்தலை புனித தலத்தின் பாதுகாப்பிற்கு பொலிஸ்துறை பொறுப்பேற்றுள்ளதாகவும், சுமார் முப்பது பொலிஸ் உத்தியோகத்தர்கள் அதன் பாதுகாப்பிற்குப் பொறுப்பாக இருப்பதாகவும் அவர் தெரிவித்தார்.

மிகிந்தலை விகாரைக்கு இராணுவம் அனுப்பப்பட்டமை அதன் பாதுகாப்புக்காக அல்ல எனவும் வேறு வேலைகளுக்காகவே எனவும் தெரிவித்த பிரமித பண்டார தென்னக்கோன், தேவையென்றால் பாதுகாப்பிற்காக இராணுவத்தை ஈடுபடுத்தும் திறன் உள்ளதாகவும் தெரிவித்தார். (அ)

# மகளின் நகை அடகுக் கடையை சூறையாடிய தாயார் சிக்கினார்!

கொழும்பு, டிசெ. 12

ராகம நகரின் மத்தியில் அமைந்துள்ள நகை அடகுக் கடையொன்றில் இருந்து கொள்ளையிடப்பட்ட தங்க நகைகள் மற்றும் ஐந்து சந்தேகநபர்கள் ராகம பொலிஸாரால் கைது செய்யப்பட்டனர்.

இவ்வாறு கைது செய்யப்பட்ட சந்தேக நபர்களில் அடகு கடை உரிமையாளரின் தாயும், காசாளரும் அடங்குவதாக பொலிஸார் தெரிவித்துள்ளனர்.

இதன்போது குறித்த அடகுக் கடையில் கொள்ளையிடப்பட்ட 14 கோடி ரூபா பெறுமதியான தங்க நகைகள் மற்றும் 6 இலட்சத்து 29 ஆயிரம் ரூபா பணமும் கைப்பற்றப்பட்டுள்ளன.

கொள்ளைச் சம்பவம் உரிமையாளரின் தாய் மற்றும் அடகுக் கடையின் காசாளர் ஆகியோரின் ஒத்துழைப்பிலேயே மேற்கொள்ளப்பட்டுள்ளதாக பொலிஸார் தெரிவித்துள்ள நிலையில், அது தொடர்பான சிசிரிவி காட்சிகளும் வெளியிடப்பட்டுள்ளன.

எனினும் சுமார் ஒரு மணி நேரத்திற்கு பின்னரே அங்கு இருந்த சிசிரிவி கமெரா அமைப்பை கொள்ளையர்கள் செயலிழக்கச் செய்துள்ளனர்.

அதன்படி, சிசிரிவி காட்சிகளை ஆய்வு செய்த பொலிஸார், கைது செய்யப்பட்டுள்ள சந்தேகநபர்கள் வெலிசறை நீதவான் நீதிமன்றில் ஆஜர்படுத்த நடவடிக்கை எடுத்துள்ளனர். (அ)

# செயற்கை நுண்ணறிவு தொழில்நுட்பத்தை மேம்படுத்துவதற்காக 1.5 பில்லியன் ரூபா!

## ஜனாதிபதி ரணில் தகவல்



கொழும்பு, டிசெ. 12

செயற்கை நுண்ணறிவு தொழில்நுட்பத்திற்காக அடுத்த ஆண்டுக்கான வரவு-செலவுத் திட்டத்தில் 1.5 பில்லியன் ரூபா ஒதுக்கப்பட்டுள்ளதாகவும், இதனூடாக இலங்கையில் முதன் முறையாக ஏ.ஐ தொழில்நுட்பத்தை மேம்படுத்தும் பணியை ஆரம்பித்துள்ளதாகவும் ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க தெரிவித்துள்ளார்.

அலரி மாளிகையில் இடம்பெற்ற நிகழ்வொன்றில் கலந்து கொண்டு உரையாற்றும் போதே ஜனாதிபதி இவ்வாறு குறிப்பிட்டார்.

இவ்விடயம் தொடர்பாக அவர் மேலும் தெரிவிக்கையில்,

செயற்கை நுண்ணறிவு தொழில்நுட்பத்திற்காக அடுத்த ஆண்டுக்கான வரவு-செலவுத் திட்டத்தில் 1.5 பில்லியன் ரூபா ஒதுக்கப்பட்டுள்ளது.

இது குறித்து துறைசார் குழுவினருடன் கலந்துரையாடியிருந்தேன். இலங்கையில் முதன் முறையாக ஏ.ஐ. தொழில்நுட்பத்தை மேம்படுத்தும் பணியை ஆரம்பித்துள்ளோம்.

மேலும், விஞ்ஞான மற்றும் ஆராய்ச்சி நடவடிக்கைகளை முன்னெடுப்பதற்காக மேலும் 08 பில்லியன் ரூபா ஒதுக்கப்பட்டுள்ளது.

இதுவரை இந்தளவு நிதி ஒதுக்கப்படவில்லை. நாம் முன்னேற வேண்டுமானால், அறிவியல் மற்றும் ஆராய்ச்சித் துறைகளில் கவனம் செலுத்த வேண்டும்.

பசுமை பொருளாதாரம் மற்றும் டிஜிற்றல் பொருளாதாரத்தை உருவாக்குவதே எங்கள் நோக்கம்.

முதலாவதாக, இந்த அறிவியல் மற்றும் ஆராய்ச்சி நடவடிக்கைகளுக்காக ஒதுக்கப்பட்ட 08 பில்லியன் தொகையை செலவழிக்க தொழில்நுட்பம் மற்றும் புத்தாக்க கவுன்சில் என்ற பெயரில் ஒரு நிறுவனம் நிறுவப்படும்.

பாராளுமன்றத்தில் தேவையான சட்டங்களை நிறைவேற்றிய பிறகு, புதிய அறிவியல் பொருளாதாரத்தையும் பசுமைப் பொருளாதாரத்தையும் உருவாக்க தேவையான நிறுவன ரீதியான கட்டமைப்பு உருவாக்கப்படும்-என்றார். (அ)

# இராணுவ பஸ் மோதியதில் தாயும் மகளும் படுகாயம்!

முல்லைத்தீவு, டிசெ. 12

முல்லைத்தீவு, சிலாவத்தை வீதியில் நேற்று முன் தினம் இரவு மோட்டார் சைக்கிளொன்று இராணுவத்தினரின் பஸ்ஸூக்குள் சிக்குண்டதில் இளம் தாயும் மகளும் படுகாயமடைந்தனர்.

மோட்டார் சைக்கிளில் பயணித்த தாயும் மகளும் வீதியில் நின்ற மாட்டுடன் மோதிய நிலையில், வீதியால் சென்று கொண்டிருந்த இராணுவ பஸ் ஸூக்குள் சிக்குண்டனர் எனக் கூறப்பட்டது.

இதன்போது படுகாயமடைந்த சிலாவத்தை பகுதியைச் சேர்ந்த இருவரும் முல்லைத்தீவு மாவட்ட மருத்துவமனை கொண்டுசெல்லப்பட்டு மேலதிக சிகிச்சைக்காக யாழ். போதனா மருத்துவமனைக்கு மாற்றப்பட்டனர்.

இச்சம்பவம் தொடர்பில் முல்லைத்தீவு பொலிஸார் மேலதிக விசாரணைகளை முன்னெடுத்துள்ளனர். (அ)

# நாட்டில் விவாகரத்து எளிதாக்கப்படுகிறது

## நீதியமைச்சர் விஜயதாஸ தகவல்



கொழும்பு, டிசெ. 12

**விவாகரத்து பெறுவதை இலகுவாக்கும் மூன்று புதிய சட்டமூலங்கள் அடுத்த மாதம் பாராளுமன்றத்தில் சமர்ப்பிக்கப்படும் என நீதியமைச்சர் விஜயதாஸ ராஜபக்ஷ தெரிவித்தார்.**

அதன்படி, திருமண காரணங்கள் சட்டம், வெளிநாட்டு விவாகரத்து தீர்ப்புகளை அங்கீகரிக்கும் சட்டம் மற்றும் சிவில் நடைமுறை விதிகளில் திருத்தங்கள் மேற்கொள்ளப்படவுள்ளன. தற்போது விவாகரத்து பெறுவதற்கு கடுமையான கட்டுப்பாடுகளை விதிக்கும் காலாவதியான சட்டங்கள் தீவிரமாக சீர்திருத்தப்படும் என்றும் அமைச்சர் குறிப்பிட்டார்.

தற்போது விவாகரத்து கோரும் நபர், மூன்றாம் தரப்பினருடன் தொடர்பு, தீங்கிழைக்கும் விலகல் அல்லது ஆண்மைக் குறைவு ஆகிய மூன்று உண்மைகளில் ஒன்றை நீதிமன்றத்தில் முன்வைக்க வேண்டும். அந்த உண்மைகளை நிரூபிக்கும் பொறுப்பு விவாகரத்து கோருபவர் மீது உள்ளது என்றும், இதுபோன்ற காரணங்களை நிரூபிப்பது மிகவும் கடினம் என்றும் சில விவாகரத்து வழக்குகள் 10 முதல் 20 ஆண்டுகள் வரை இழுபறியாக உள்ளதாகவும், விவாகரத்து சட்டத்தில் திருத்தங்களை மேற்கொள்வதில் இந்த உண்மைகள் பரிசீலிக்கப்பட்டதாகவும் அமைச்சர் தெரிவித்தார். (அ)




# மன்னாரிலும் கவனயீர்ப்பு

மன்னார், டிசெ. 12

சர்வதேச மனித உரிமைகள் தினத்தையொட்டி மன்னாரில் நேற்று கவனயீர்ப்புப் போராட்டமொன்று முன்னெடுக்கப்பட்டது.

மன்னார் மாவட்ட பாதிக்கப்பட்ட குடும்பங்களுக்கான இணையத்தின் இணைப்பாளர் அருந்தவநாதன் நிரோஜன் தலைமையில் இடம்பெற்ற குறித்த கவனயீர்ப்பு போராட்டத்தில், காணாமல் ஆக்கப்பட்டவர்களின் உறவுகள், பொது அமைப்புகளின் பிரதிநிதிகள் உட்பட பலர் கலந்து கொண்டனர்.

இதன்போது போராட்டத்தில் ஈடுபட்டவர்கள்" மன்னார் மாவட்டத்தில் இடம்பெற்ற அரச காணிகள் கொள்ளை தொடர்பாக நீதியை பெற்றுத் தாருங்கள், பணக்காரர்களுக்காக தாரை வார்க்கப்படும் மேய்ச்சல் தரைகள், கடற்கரையோரம், காட்டு நிலங்கள் தடுத்து நிறுத்துங்கள்" உள்ளிட்ட பல வேறு கோரிக்கைகளை முன் வைத்தனர். (அ)

# எட்டு அம்சக் கோரிக்கைகளை முன்வைத்து யாழில் போராட்டம்!




யாழ்ப்பாணம், டிசெ. 12

மனித உரிமைகள் தினத்தை முன்னிட்டு வடமாகாண சமூக மட்ட அமைப்புக்களால், 8 அம்சக் கோரிக்கைகளை முன் வைத்து யாழ்.மாவட்ட செயலகத்துக்கு முன்பாக கவனயீர்ப்புப் போராட்டமொன்று முன்னெடுக்கப்பட்டது.

மெசிடோ நிறுவனத்தின் ஏற்பாட்டில் குறித்த போராட்டம் முன்னெடுக்கப்பட்டிருந்தது.

இதன்போது "பயங்கரவாத தடைச்சட்டத்தை உடன் நீக்குதல், கொக்கிளாய் மனித புதைகுழிக்கு நீதியான விரைவான விசாரணையை முன்னெடுத்தல், மனித சித்திரவதைகளை நிறுத்துதல், பெண்களுக்கெதிரான வன்முறையை நிறுத்துதல், காணாமல் ஆக்கப்பட்டவர்களுக்கான பொறுப்புக்கூறலை விரைவுபடுத்துதல், பூநகரிப் பிரதேசத்தில் பொன்னாவெளிப் பகுதியில் சுண்ணக்கல் அகழ்வையும், சீமெந்து தொழிற்சாலை அமைப்பதையும் உடன் நிறுத்துதல், மன்னார்தீவில் கனியமண் அகழ்வை உடன் நிறுத்துதல், மன்னார்தீவில் காற்றாலைமின்சாரத்தை அமைக்காது, அதனை வேறுபகுதிக்கு மாற்றுதல் என எட்டு கோரிக்கைகள் முன்வைக்கப்பட்டிருந்தமை குறிப்பிடத்தக்கது. (அ)

# உர மோசடிக்கு ஏன் இன்னும் நடவடிக்கை எடுக்கவில்லை?

## சஜித் சபையில் கேள்வி

கொழும்பு, டிசெ. 12

ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷ ஆட்சியில் இரசாயன உரங்கள் ஒரே நேரத்தில் தடை செய்யப்பட்டு சேதன உரங்களைப் பயன்படுத்துவதற்கான தன்னிச்சையான முடிவால் நம் நாட்டிற்கு ஏற்பட்ட இழப்பு பாரியது என்றும், சில இழப்புகளை கணிப்பிட முடியாதுள்ளதாகவும், இது தொடர்பாக, கணக்காய்வாளர் நாயக திணைக்களம் முறைப்படி மேற்கொண்ட கணிக்காய்வு அறிக்கையை 2022 ஆம் ஆண்டு செப்ரெம்பர் மாதம் 2 ஆம் திகதி பாராளுமன்றத்தில் சமர்ப்பித்து ஒரு வருடத்திற்கு மேல் கடந்திருந்தாலும், தற்போதைய ஜனாதிபதியோ அல்லது விவசாய அமைச்சரோ இது தொடர்பில் முறையான நடவடிக்கை எதனையும் எடுக்கவில்லை எனவும் எதிர்கட்சித் தலைவர் சஜித் பிரேமதாஸ தெரிவித்தார்.

இந்த ஊழல்கள் மோசடிகள் போலவே அரசாங்கத்தில் நிலவு வரும் ஊழல் முறைகேடுகளுக்கு எதிராக எந்த நடவடிக்கையும் எடுக்கப்படவில்லை என்றும், எந்த வித நடவடிக்கைகளும் எடுக்கப்படாததால் மக்கள் விரக்தியடைந்துள்ளனர் என்றும் அவர் குறிப்பிட்டார்.

நிலையியற் கட்டளை 27 (2) இன் கீழ் நேற்று திங்கட்கிழமை பாராளுமன்றத்தில் கேள்வி எழுப்பிய போதே எதிர்க்கட்சித் தலைவர் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

மல உர மோசடி மற்றும் நனோ உரங்களை அதிக விலைக்கு இறக்குமதி செய்ததனால் நாடு பெருமளவு பணத்தைச் செலவழிக்க நேர்ந்ததாகவும், கணக்காய்வு அறிக்கை தயாரிக்கப்பட்டு வருவதாக கூறப்பட்டாலும் அது இன்னும் மேற்கொள்ளப்படவில்லை என்றும் எதிர்க்கட்சித் தலைவர் தெரிவித்தார்.

கணக்காய்வு அறிக்கையின் மூலம் நிரூபணமான இந்தக் குற்றச்சாட்டுகளை கோப் குழுவின் முன்கொண்டு வருவதில் காலதாமதம் ஏற்படுவதிலிருந்து இதற்கு காரணமானவர்களை அரசாங்கம் பாதுகாக்கிறது என்பது புலப்படுவதாகவும், இனிமேலும் இத்தரப்பினரை பாதுகாக்காமல் மக்களுக்கு நீதியை நிலைநாட்டுமாறும் எதிர்க்கட்சித் தலைவர் சஜித் பிரேமதாஸ தெரிவித்தார். (அ)

# போதைப்பொருளுடன் இளைஞன் சிக்கினார்!

கொழும்பு, டிசெ. 12

ஹெரோயின் மற்றும் ஐஸ் போதைப்பொருள் தன் கைவசம் வைத்திருந்த குற்றச்சாட்டில் நபர் ஒருவர் மஹியங்கனை பொலிஸாரினால் கைது செய்யப்பட்டுள்ளதாக மஹியங்கனை பொலிஸார் தெரிவித்தனர்.

மஹியங்கனை பொலிஸ் பிரிவில் மஹியங்கனை பொலிஸாரினால் முன்னெடுக்கப்பட்ட சுற்றிவளைப்பின் போது ஐஸ் மற்றும் ஹெரோயின் போதைப்பொருளை தன் கைவசம் வைத்திருந்த குற்றச்சாட்டில் 32 வயதுடைய குருகம்மான மஹியங்கனை பகுதியை சேர்ந்த நபர் ஒருவர் மஹியங்கனை பொலிஸாரினால் கைது செய்யப்பட்டுள்ளார்.

குறித்த நபரிடம் இருந்து 6050 மில்லி கிராம் ஹெரோயின் போதைப்பொருளும் 1400 மில்லி கிராம் ஐஸ் போதைப்பொருளும் மஹியங்கனை பொலிஸாரினால் கைப்பற்றப்பட்டுள்ளன.

குறித்த சந்தேக நபரிடம் விசாரணைகளை மேற்கொண்டதன் பின்னர் நீதவான் நீதிமன்றத்தில் ஆஜர் படுத்துவதற்கான நடவடிக்கைகளை மேற்கொண்டு வருவதாக மஹியங்கனை பொலிஸார் கூறினர். (அ)

# கொழும்பு தமிழரை இலக்கு வைத்து பொலிஸ் மேற்கொள்ளும் அநீதி நிறுத்தப்பட வேண்டும்!

## எதிர்க்கட்சித் தலைவர் கோரிக்கை

கொழும்பு, டிசெ. 12

கொழும்பு தமிழர்களை இலக்கு வைத்து பொலிஸாரால் மேற்கொள்ளப்படும் அநீதி நிறுத்தப்படவேண்டும் என எதிர்க்கட்சித் தலைவர் சஜித் பிரேமதாஸ கோரிக்கை விடுத்துள்ளார்.

கிருலப்பனை, வெள்ளவத்தை, தெஹிவளை, பம்பலப்பிட்டி, நாரஹேன்பிட்டி, கொட்டாஞ்சேனை, மட்டக்குளி மற்றும் மோதறை ஆகிய பொலிஸ் பிரிவுகளில் உள்ள தமிழ் மக்களை குறிவைத்து மீண்டுமொரு பதிவு நடவடிக்கை நடந்து வருவதாகவும், இந்த அனைத்து பதிவு விபர பத்திர ஆவணங்களும் சிங்கள மொழியிலேயே வழங்கப்படுவதாகவும், நாட்டின் அரசியலமைப்பை மீறி சிங்கள மொழியில் மட்டுமே இந்த விபர பதிவுப் பத்திர ஆவணங்களை வழங்குகின்றனர் என்றும், அது தவறான விடயம் என்றும், ரணில்-பொலிஸ் இராச்சிமா நடக்கிறது என சந்தேகம் எழுவதாக பாராளுமன்ற உறுப்பினர் மனோ கணேசன் எழுப்பிய கேள்வி ஒன்றிற்கு பதிலளிக்கும் முகமாக கருத்துத் தெரிவிக்கும் போதே சஜித் பிரேமதாஸ இவ்வாறு தெரிவித்தார்.

இந்நடவடிக்கை தவறானது என்றும், ஆட்களை பதிவு செய்யும் நடைமுறையொன்று உள்ளதாகவும், இந்த பதிவு முறைக்கு குறித்த நடைமுறையையே நடைமுறைப்படுத்தப்பட வேண்டும் என்றும், இதற்காக பொலிஸ் முறையை பயன்படுத்தி அநீதி இழைக்கக் கூடாது என்றும் எதிர்க்கட்சித் தலைவர் கூறினார்.

நாட்டின் தேசியப் பாதுகாப்பைப் போலவே குற்றங்களைக் குறைப்பதும் முக்கியம் என்றாலும், ஏதேனும் நியாயமற்ற முறை நடைமுறைப்படுத்துவதற்கு இடமளிக்க முடியாது என்றும், எந்தவொரு வேலைத்திட்டத்திலும் வெளிப்படைத்தன்மையும் ஜனநாயகமும் நிலைநாட்டப்பட வேண்டும் என்பதையும் அவர் இங்கு சுட்டிக்காட்டினார். (அ)

# இந்தியா பாதுகாப்பாயிருந்தால் அது இலங்கைக்கும் பாதுகாப்பு

## தூதுவர் கோபால் பாக்லே கூறுகிறார்

கொழும்பு, டிசெ. 12

**இந்தியா பாதுகாப்பாகயிருந்தால் இலங்கையும் பாதுகாப்பாகயிருக்கும் என இலங்கைக்கான இந்திய தூதுவர் கோபால் பாக்லே தெரிவித்தார்.**

இலங்கை எதிர்கொண்ட முன்னொருபோதும் இல்லாத நெருக்கடியின்போது வேகமாக-வலுவான விதத்தில் செயற்பட்டமைபோன்று இந்தியா வேறு ஒரு நெருக்கடி விடயத்தில் நடந்துகொள்ளவில்லை. எந்த நாட்டுக்கும் உதவவில்லை என இந்திய தூதுவர் தெரிவித்தார்.

இந்தியா இலங்கைக்கு உதவுவதற்காக சர்வதேச அளவிலும உள்நாட்டிலும் தனது பங்களிப்பை வழங்கியது என குறிப்பிட்ட அவர், இந்தியாவின் தலைமைத்துவம் வலுவான இந்திய இலங்கை உறவுகள் குறித்து தெளிவாகவும் அர்ப்பணிப்புடனும் உள்ளது எனவும் கூறினார்.

சீனக் கப்பல்கள் கொழும்புக்கு வருவது குறித்த இந்தியாவின் கரிசனைகள் குறித்த கேள்விக்கு பதிலளித்த அவர், இந்தியாவும் இலங்கையும் இந்து சமுத்திரத்தில் உள்ளன கடற்பயணச் சுதந்திரத்தை உறுதி செய்வது இரு நாடுகளினதும் கூட்டு பொறுப்பு-கடப்பாடு எனவும் தெரிவித்தார்.

உருவாகின்ற கடல்சார் சவால்களுக்கு இணைந்து தீர்வை காணவேண்டும் எனவும் அவர் தெரிவித்துள்ளார்.

பாதுகாப்பும் ஸ்திரத்தன்மையும் காணப்பட்டால் அமைதியும் வளமும் காணப்படும் எனவும் தெரிவித்த தூதுவர், எங்கள் நாடுகள் அமைந்துள்ள பகுதியில் பாதுகாப்பை உறுதி செய்வது எங்களின் கூட்டு பொறுப்பாகும். இந்த அர்த்தத்தில் இலங்கையினதும் இந்தியாவினதும் பாதுகாப்பு பிரிக்க முடியாதது பரஸ்பரம் ஒன்றிணைந்தது எனவும் குறிப்பிட்டார். (அ)

# உலகத் தமிழர் பேரவையினரை சந்திக்க மறுத்த கஜேந்திரகுமார்



கொழும்பு, டிசெ. 12

சிங்கள பௌத்த பிக்குகளுடன் இணைந்து பிரகடனமொன்றில் கையொப்பமிட்டதை அடுத்து உலகத் தமிழர் பேரவையுடனான சந்திப்பை தமிழ் தேசிய மக்கள் முன்னணி புறக்கணித்துள்ளது.

மாவீரர் நினைவேந்தலின் போது அரசாங்கம் மக்கள் மீது மீண்டும் பயங்கரவாத தடைச் சட்டத்தை கட்டவிழ்த்துவிட்டதாக அக்கட்சியின் தலைவர் பாராளுமன்ற உறுப்பினர் கஜேந்திரகுமார் பொன்னம்பலம் கூறினார்.

இந்த பின்னணியில், அரசாங்கத்திடம் பிரகடனத்தை கையளித்தமையானது வெள்ளையடிப்பு செயற்பாடு என்றும் கஜேந்திரகுமார் பொன்னம்பலம் குற்றம் சாட்டினார்.

இந்த விடயங்கள் தொடர்பாக தாயகத்தில் உலக தமிழர் பேரவை எவருடனும் கலந்தாலோசிக்கவில்லை எனவும் அவர் மேலும் சுட்டிக்காட்டினார்.

இந்நிலையில் இலங்கைக்கு பயணம் செய்துள்ள உலக தமிழர் பேரவை உறுப்பினர்களை சந்திக்க பாராளுமன்ற உறுப்பினர் கஜேந்திரகுமார் பொன்னம்பலம் மறுப்பு தெரிவித்தார். (அ)



# கரையொதுங்கிய வெளிநாட்டு படகு!

யாழ்ப்பாணம், டிசெ. 12

வடமராட்சி கிழக்கு குடத்தனை வடக்கு பொற்பதி பகுதியில் படகு ஒன்று கரை ஒதுங்கியுள்ளது.

குறித்த படகு கரை தட்டுவதை கண்ட பிரதேச மீனவர்கள், பருத்தித்துறை பொலிஸார், மற்றும் பாதுகாப்பு தரப்புக்களுக்கு அறிவித்ததுடன் குறித்த படகை கரையேற்றினர்.

இது தொடர்பான மேலதிக விசாரணைகளை பருத்தித்துறை பொலிஸார் மேற்கொண்டுள்ளனர்.

குறித்த படகு மாதிரி இலங்கையில் பயன்படுத்துவது போன்று இல்லை என்றும் இது இந்திய படகாக இருக்கலாம் எனவும் பிரதேச மீனவர்கள் தெரிவிக்கின்றனர். (அ)

# தாயும் மகனும் தாக்கப்பட்டு வைத்தியசாலையில் அனுமதி

கொழும்பு, டிசெ. 12

எல்பிட்டிய பொலிஸ் பிரிவுக்கு உட்பட்ட அநுருத்தகம பகுதியில் வைத்து தாய் மற்றும் அவரது மகன் மீது நபர் ஒருவர் நேற்று திங்கட்கிழமை காலை கூரிய ஆயுதத்தால் தாக்கியுள்ளார்.

இத்தாக்குதலில் 55 வயதுடைய பெண்ணும் அவரது 25 வயது மகனும் காயமடைந்துள்ளனர்.

தாக்குதலில் படுகாயமடைந்த இருவரும் எல்பிட்டிய போதனா வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்ட பின்னர் மேலதிக சிகிச்சைக்காக கராப்பிட்டிய போதனா வைத்தியசாலைக்கு மாற்றப்பட்டுள்ளனர்.

அயலவர்களுடன் ஏற்பட்ட தகராறு காரணமாக இந்த தாக்குதல் இடம்பெற்றுள்ளதாக முதற்கட்ட விசாரணையில் தெரியவந்துள்ளது.

இரு தரப்பினருக்கும் இடையில் ஏற்பட்ட தகராறு தொடர்பான முறைப்பாடு தொடர்பில் எல்பிட்டிய பொலிஸ் நிலையத்தில் விசாரணை நடத்துவதற்காக நேற்று அழைக்கப்பட்ட பின்னணியிலேயே இந்தத் தாக்குதல் மேற்கொள்ளப்பட்டுள்ளது. (அ)

# பொலனறுவை விபத்தில் பாடசாலை மாணவன் பலி

கொழும்பு, டிசெ. 12

பொலன்னறுவை, சுங்காவில பிரதான வீதியின் 16 ஆம் இலக்க கட்டைப் பகுதியில் இடம்பெற்ற வாகன விபத்தில் பாடசாலை மாணவர் ஒருவர் உயிரிழந்துள்ளார்.

மோட்டார் சைக்கிள் ஒன்று மற்றுமொரு வாகனத்தை முந்திச் செல்வதற்காக முற்பட்ட சந்தர்ப்பத்தில் வேகக் கட்டுப்பாட்டையிழந்து எதிர் திசையில் வந்த மற்றொரு மோட்டார் சைக்கிள் ஒன்றுடன் மோதி விபத்துக்குள்ளாகியது.

இதன்போது காயமடைந்த இரு மோட்டார் சைக்கிள் ஓட்டுநர்கள் மற்றும் பின்னால் அமர்ந்து பயணித்த மேலும் இருவரும் வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்ட நிலையில் மோட்டார் சைக்கிளைச் செலுத்திய 17 வயதுடைய பாடசாலை மாணவர் உயிரிழந்துள்ளார்.

# வரவு-செலவுத் திட்டம் ஊடாக மக்களை கொல்வதற்கு திட்டம்

## ஐக்கிய மக்கள் சக்தி குற்றச்சாட்டு

கொழும்பு, டிசெ. 12

பெறுமதி சேர் வரி உள்ளிட்டு அனைத்து விடயங்கள் ஊடாகவும் நாட்டு மக்களை கொலை செய்வதற்குரிய வேலைத்திட்டங்களே அதிகளவில் முன்னெடுக்கப்பட்டு வருவதாக ஐக்கிய மக்கள் சக்தியின் பாராளுமன்ற உறுப்பினர் ஹெக்டர் அப்புஹாமி குற்றம்சாட்டினார்.

2024 ஆம் ஆண்டுக்கான வரவு-செலவுத் திட்டம் மீதான குழுநிலை விவாதம் இடம்பெற்றுவரும் நிலையில், பாராளுமன்றத்தில் நேற்று உரையாற்றும் போதே அவர் இவ்வாறு கூறினார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்-

முதலாவதாக உயிர்த்த ஞாயிறு தாக்குதலில்போது மக்களை கொன்று அந்த இரத்த கரையூடாக பெறப்பட்ட பலத்தில் மூலம் இந்த அரசாங்கம் ஆட்சியமைத்தது.

அடுத்ததாக கொவிட் ஊடாக இந்த நாட்டு மக்கள் கொல்லப்பட்டனர் என்பதை நினைவில் வைத்துக்கொள்ளுங்கள்.

அதுமாத்திரமல்ல எரிவாயுவை வெடிக்கவைத்து மக்கள் கொல்லப்பட்டனர். அத்துடன், எரிபொருள் நிரப்பு நிலையங்களில் வரிசையில் நின்று மக்கள் உயிரிழந்தனர்.

தரமற்ற மருந்துகளை இறக்குமதி செய்து வைத்தியசாலைகளில் இருந்து நோயாளர்களைக் கொன்றனர்.

ஆனால் இன்று வற் சுமையை அனைத்து மக்களின் தலையிலும் சுமத்தி அதன் மூலம் மக்களை கொள்வதற்கான வேலைத்திட்டம் முன்னெடுக்கப்பட்டுள்ளது.

மக்களைக் கொல்லும் ஒவ்வொரு வேலைத்திட்டத்தின் போதும் நீங்கள் கைகளைத் தட்டி ஆரவாரமிட்டு எங்களுக்கு சேறுபூசும் நடவடிக்கையினை முன்னெடுத்துள்ளீர்கள்.

இந்த வரவு-செலவுத்திட்ட விவாதத்தின் போது எதிர்க்கட்சித் தலைவர் சஜித் பிரேமதாஸ மீது சேறுபூசும் நடவடிக்கையே முழுமையாக முன்னெடுக்கப்பட்டுள்ளது.

எந்தவொரு நபரும் இந்த நாட்டுக்காக புதிய முன்மொழிவுகளை முன்வைக்கவில்லை. இந்த நாட்டு மக்களின் உரிமைகள் தொடர்பில் எந்தவொரு நபரும் கருத்துக்களை முன்வைக்கவில்லை.

ஆனால், நாட்டு மக்களுக்காக கருத்துக்களை வெளிப்படுத்திய எதிர்க்கட்சித்தலைவர் மீதும் அவரது குடும்ப உறுப்பினர்கள் மீதும் சேறு பூசுவதற்கு மாத்திரமே இந்த சபையில் உள்ளவர்களுக்கு முதுகெலும்பு இருந்தது-என்றார். (அ)

# வெளிநாட்டு சிகரெட்டுகளுடன் கட்டுநாயக்கவில் ஒருவர் கைது



கொழும்பு, டிசெ. 12

சட்டவிரோதமாக இலங்கைக்கு கொண்டுவரப்பட்ட வெளிநாட்டு சிகரெட்டுகளுடன் கட்டுநாயக்க விமான நிலையத்தில் வைத்து ஒருவர் கட்டுநாயக்க விமான நிலைய பொலிஸாரால் கைது செய்யப்பட்டார்.

கைது செய்யப்பட்டவர் கம்பளை பிரதேசத்தை சேர்ந்த 55 வயதுடையவராவார்.

இவர் டுபாயிலிருந்து நேற்று அதிகாலை 3.30 மணியளவில் கட்டுநாயக்க விமான நிலையத்தை வந்தடைந்தார்.

கட்டுநாயக்க விமான நிலையச் சோதனை நடவடிக்கையில் 22 இலட்சத்து 80 ஆயிரம் ரூபாய் பெறுமதியான 114 சிகரெட் பெட்டிகள் பொலிஸாரால் கைப்பற்றப்பட்டன.

கைது செய்யப்பட்டவர் நீர்கொழும்பு நீதிவான் நீதிமன்றத்தில் ஆஜர்படுத்தப்படவுள்ளதாக பொலிஸார் தெரிவித்தனர்.

# தென்கிழக்கு பல்கலை தொழில்நுட்ப பீடத்தில் 3டி மொடலிங் மற்றும் ரோபோட்டிக் ஆய்வகம்!

அம்பாறை, டிசெ. 12

**தென்கிழக்குப் பல்கலைக்கழக தொழில்நுட்ப பீடத்தில் 3டி மாடலிங் மற்றும் ரோபோட் டிக் ஆய்வகம் துருக்கிய ஒத்துழைப்பு மற்றும் ஒருங்கிணைப்பு நிறுவன நிதி உதவியில் இலங்கை தென்கிழக்குப் பல்கலைக்கழகத்தின் தொழிநுட்ப பீடத்தின் தகவல் மற்றும் தொடர்பாடல் தொழில்நுட்ப துறையானது அதிநவீன 3டி மொடலிங் மற்றும் ரோபோட்டிக்ஸ் ஆய்வகத்தை நிறுவுவதற்குத் தேவையான அதிநவீன 3 டி பிரிண்டர், ரோபோட்டிக் கை உட்பட பல ரோபோட்டிக் உபகரணங்களை துருக்கிய ஒத்துழைப்பு மற்றும் ஒருங்கிணைப்பு நிறுவனத்திடமிருந்து வைபவ ரீதியாக பெற்றுக்கொண்டது.**

இந்தக் கையளிப்பு நிகழ்வில், பல்கலைக்கழக உபவேந்தர் பேராசிரியர் ரமீஸ் அபூபக்கர், தொழில்நுட்ப பீட பீடாதிபதி கலாநிதி யூ.எல். மஜீத், தகவல் மற்றும் தொடர்பாடல் தொழில் நுட்பத் துறை தலைவர் ஆர். கே. றிபாய் காரியப்பர், சிரேஷ்ட விரிவுரையாளரும் முன்னாள் துறை தலைவருமான கே.எம். றிப்தி உட்பட பீடாதிபதிகள், திணைக்களத் தலைவர்கள், கல்விசார் மற்றும் கல்விசாரா ஊழியர்கள், பல்கலைக்கழக மாணவர்கள் மற்றும் துருக்கிய ஒத்துழைப்பு மற்றும் ஒருங்கிணைப்பு நிறுவன பிரதிநிதிகளான செவ்கி மெர்ட் பாரிஸ், ஜெய்னெப் பைராக் மற்றும் ஓயா துதுன்சு ஆகியோர் கலந்து சிறப்பித்தனர்.



இந்நிகழ்வு மேம்பட்ட தொழில்நுட்பத்தின் பௌதீக பரிமாற்றத்தைக் குறித்தது மட்டுமன்றி, கல்வி மற்றும் தொழில்நுட்ப முன்னேற்றத் துறையில் இரு நாடுகளுக்கிடையிலான கூட்டு முயற்சிகளை வலுப்படுத்துவதை அடையாளப்படுத்துகிறது என்று உபவேந்தர் தனது உரையில் குறிப்பிட்டார். மேலும் இந்த நன்கொடையானது பல்கலைக்கழகத்தின் ஆராய்ச்சி மற்றும் கல்வித் துறைகளில் மாற்றியமைக்கும் தாக்கத்தை ஏற்படுத்தும் என்று வலியுறுத்தினார். அத்தோடு பல்கலைக்கழக வளாகத்தில் புதுப்பிக்கத்தக்க கதிரவ அமைப்பினை நிறுவுவதில் துருக்கிய ஒத்துழைப்பு மற்றும் ஒருங்கிணைப்பு நிறுவனத்தின் ஆதரவை கோரினார்.

அக்கோரிக்கைக்கு பதிலளித்த துருக்கிய ஒத்துழைப்பு மற்றும் ஒருங்கிணைப்பு நிறுவன நிர்வாகிகள், தம்மாலான முழு ஒத்துழைப்புகளையும் வழங்குவோம் என்று உறுதி பகர்ந்தனர்.

தென்கிழக்குப் பல்கலைக்கழகத்திற்கும் துருக்கிய ஒத்துழைப்பு மற்றும் ஒருங்கிணைப்பு நிறுவனத்திற்கும் இடையேயான இந்த கூட்டு முயற்சி, இலங்கையில் அறிவியல் மற்றும் தொழில்நுட்பக் கல்வியை மேம்படுத்துவதில் ஒரு முக்கிய திருப்புமுனையாகும்.

இந்த உபகரணங்கள் ஆய்வாளர்களுக்கும், மாணவர்களுக்கும் நவீன தொழில்நுட்பங்களுடன் பணியாற்றுவதற்கான வாய்ப்பை வழங்குவதோடு புதுமையான தீர்வுகளை உருவாக்கவும், சவால்களைத் தீர்க்கவும் உதவும். (அ)



# கல்முனை பிராந்திய சுகாதார சேவைகள் பணிப்பாளராக மருத்துவர் சஹீலா இஸ்ஸதின்

அம்பாறை, டிசெ. 12

கல்முனை பிராந்திய சுகாதார சேவைகள் பணிப்பாளராக நேற்று மருத்துவர் சஹீலா இஸ்ஸதின் கடமையேற்றுக் கொண்டார்.

சாய்ந்தமருதை சேர்ந்த இவர் முதலாவது கல்முனை பிராந்திய சுகாதார சேவைகள் பணிப்பாளராக கடமையேற்ற பெண் அதிகாரியாவார். மருத்துவ துறையில் 35 வருட சேவைக் காலத்தை கொண்ட இவர் சாய்ந்தமருதின் முதலாவது பெண் மருத்துவ கலாநிதியும், மருத்துவ நிர்வாகத்துறையில் முதலாவது முஸ்லிம் பெண் நிர்வாக உத்தியோகத்தரும் ஆவார்.

சாய்ந்தமருது முன்னாள் மரண விசாரணை அதிகாரி மர்ஹூம் ராசிக் காரியப்பரின் புதல்வியும், ஓய்வுபெற்ற பிராந்திய சுகாதார சேவைகள் பிரதிப் பணிப்பாளர் டாக்டர் ஏ. இஸ் ஸதீனின் மனைவியும் ஆவார்.

சாய்ந்தமருது பிரதேச வைத்தியசாலை, சாய்ந்தமருது சுகாதார வைத்திய அதிகாரி, கல்முனை அஷ்ரப் ஞாபகார்த்த வைத்தியசாலை மற்றும் நிந்தவூர் தள வைத்தியசாலை ஆகியவற்றில் கடமையாற்றி நிறுவனம் சார்பான போட்டிகளில் பங்கு பற்றி பல வெற்றிகளைப் பெற்றவர் என்பதும் குறிப்பிடத்தக்கது. (அ)

# பல வருடங்களாக சேதமடைந்து காணப்படும் வாய்க்கால் தொடர்பில் விவசாயிகள் விசனம்

அம்பாறை, டிசெ. 12

சம்மாந்துறை விவசாய விரிவாக்கல் பிரிவிற்குட்பட்ட பாலயடி போட்டா , தொய்யம் வட்டை கீழ்க்கண்டம் மற்றும் மேற்கண்டம் ஆகிய சுமார் 300 ஏக்கருக்கும் அதிகமான வயல் நிலங்களில் இருந்து வெளியேற்றப்படும் வடிச்சல் நீர் கிரவல் ஆற்றில் சேருமிடத்திலுள்ள வாய்க்கால் சேதமடைந்து பல வருடங்களாகியும் இன்னும் திருத்தப்படாத நிலையிலேயே காணப்படுவதாக பிரதேச விவசாயிகள் விசனம் தெரிவிக்கின்றனர்.



இந்த வாய்க்கால் சேதமடைந்துள்ளதால் இதன் மேலாக போடப்பட்டிருந்த கொங்கிறீட் பாலமும் இடிந்து விழுந்துள்ளது. இதனால் ஏனைய வயல்களுக்குச் செல்லும் விவசாயிகளும் உழவு இயந்திரங்களும் சுற்றி வளைத்தே தமது வயல் நிலங்களுக்குச் செல்ல வேண்டியுள்ளது.

அத்துடன் வாய்க்கால் ஆழமாகவுள்ளதால் இருபுறமும் உள்ள வயல் நிலங்கள் ஒவ்வொரு போகத்தின் போதும் இடிந்து விழுவதால் விவசாயிகள் பலவிதமான பிரச்சினைகளுக்கு முகம் கொடுக்க வேண்டியுள்ளது.

இவ்விடயம் தொடர்பாக சம்பந்தப்பட்ட அதிகாரிகளுக்கு பலமுறை தெரிவித்தும் இது வரை இவ்வாய்க்கால் திருத்த வேலைகள் இடம்பெறாமல் இருப்பது மிகவும் கவலையளிப்பதாக விவசாயிகள் தெரிவித்தனர். (அ)



# மூத்த ஆலிம்கள் கௌரவிப்பு

அம்பாறை, டிசெ. 12

அம்பாறை மாவட்டம் கல்முனை பிரதேசத்தில் உள்ள மூத்த ஆலிம்களுக்கான கௌரவிப்பு நிகழ்வு அகில இலங்கை ஜம்இய்யதுல் உலமா கல்முனை கிளைக் காரியாலயத்தின் ஏற்பாட்டில் அதன் தலைவர் அஷ்-ஷெய்க் அல்-ஆலிம் அல்-முப்தி ஏ.எல்.எம். முர்ஷித் (ஸஃதி, நஜ்மி) தலைமையில் அகில இலங்கை ஜம்இய்யதுல் உலமா கல்முனை கிளைக் காரியாலயத்தில் இடம் பெற்றது.

இந் நிகழ்வில் பிரதம அதிதியாக வெலிகம பாரி அரபுக் கல்லூரி அதிபர் அஷ்-ஷெய்க் அல்-ஆலிம் ஏ.ஆர். அப்துர் ரஹ்மான் (மழாஹிரி)கலந்து கொண்டார். இதன் போது நீண்ட காலமாக ஆலிம்களாக கடமையாற்றிய மூத்த ஆலிம்களான,

அஷ்ஷெய்க்.எம்.எல்.முஹம்மத் சுல்தான் (கபூரி), அஷ்-ஷெய்க் இஸட் முஹம்மத் நதீர் (ஷர்க்கி), அஷ்-ஷெய்க் எம்.ஐ. முஹம்மத் ரபீக், அஷ்-ஷெய்க் எஸ்.எம்.முஹம்மத் ஆரிப் (நத்வி), அஷ்-ஷெய்க் எம்.எம். உதுமா லெப்பை (நூரி), அஷ்-ஷெய்க் யூ.எல். சாகுல் ஹமீத் (ஹாமி), அஷ்-ஷெய்க் ஏ.எம்.முபாறக் அப்துல் மஜீட் (கபூரி,மதனி), அஷ்-ஷெய்க் யூ.எல்.எம். இக்பால் (ஹாமி), அஷ்ஷெய்க் எஸ்.எச். குதுபுத்தீன் (ஹாமி), அஷ்-ஷெய்க் கே.எம்.ஹாறூன் (சலபி), அஷ்-ஷெய்க்.பி.எம். நிஸாம்

(ஹாஷிமி), அஷ்-ஷெய்க் எம்.சி. அப்துஸ் ஸமட் (தப்லீகி), அஷ்-ஷெய்க்.ரி.ரிபானுத்தீன் (பலாஹி), அஷ்-ஷெய்க்.ஐ.எல். வலியுல்லாஹ் (ஹாமி), அஷ்-ஷெய்க்.ஐ.எல்.நசீர் அஹமட் (நிழாமி) ஆகியோர் நினைவு சின்னம் பொன்னாடை போற்றி கௌரவிக்கப்பட்டனர். (அ)

# கிழக்கு கல்வி மதிப்பீட்டுக் குழு சம்மாந்துறை பகுதிக்கு விஜயம்!

அம்பாறை, டிசெ. 12

கிழக்கு மாகாண கல்வித் திணைக்களத்தின் பாடசாலை மதிப்பீட்டு குழுவினர் சம்மாந்துறை வலயத்தில் உள்ள அல்மர்ஜான் முஸ்லிம் மகளிர் கல்லூரிக்கு விஜயம் செய்திருந்தனர்.

கிழக்கு மாகாண மேலதிக மாகாணகல்வி பணிப்பாளர் எம். எம்.ஜவாத் தலைமையிலான குழுவினர் இந்த விஜயத்தின்பொழுது கலந்து கொண்டனர்.

அதேவேளை, சம்மாந்துறை வலய கல்வி பணிப்பாளர் டாக்டர் உமர் மௌலானா தலைமையிலான கல்வி அதிகாரிகளும் கலந்துகொண்டனர்.



காலை 7 மணி தொடக்கம் மாலை 6 மணி வரை அங்கு கற்றல் கற்பித்தல் மதிப்பீடு ஏனைய பண்புத்தர சுட்டிகள் தொடர்பிலான மதிப்பீடுகளும் காலையில் நடைபெற்றன.

பின்னர் அதிபர் ஆசிரியர்கள் உடனான கலந்துரையாடல் மாலை 6 மணிவரை இடம் பெற்றது.

அங்கு பாடசாலை தொடர்பிலான சாதக பாதக விடயங்களை அதிகாரிகள் சுட்டிக் காட்டியதுடன் பரிகார செயன்முறைகளையும் விதந்துரைத்தனர். (அ)

ஈழநாடு



# காஷ்மீர் சிறப்பு அந்தஸ்தை நீக்கியமை ஏற்புடையதே!

## இந்திய உச்சநீதிமன்றம் தீர்ப்பு
## 2024 செப். முன்னர் தேர்தல் நடத்தவும் பணிப்பு

புதுடில்லி, டிசெ. 12

**ஜம்மு காஷ்மீருக்கு சிறப்பு அந்தஸ்து அளித்த சட்டப்பிரிவு 370 இரத்து செல்லும் என்று இந்திய உச்ச நீதிமன்றம் தீர்ப்பளித்துள்ளது. மேலும், அங்கு வரும் 2024 செப்ரெம்பருக்குள் தேர்தலை நடத்த வேண்டும் என்றும் அறிவுறுத்தியுள்ளது.**




ஜம்மு காஷ்மீர் மாநிலத்துக்கு சிறப்பு அந்தஸ்து அளித்த சட்டப்பிரிவு 370 இரத்து செய்யப்பட்டதை எதிர்த்து தாக்கல் செய்யப்பட்ட மனுக்களை விசாரித்த 5 நீதிபதிகள் அடங்கிய உச்சநீதிமன்ற அரசியல் சாசன அமர்வு நேற்று தனது தீர்ப்பை வழங்கியது.

தீர்ப்பை வாசிப்பதற்கு முன்பாக, இந்த வழக்கில் 3 விதமான தீர்ப்புகள் உள்ளன என்று உச்ச நீதிமன்ற தலைமை நீதிபதி டி. வை. சந்திரசூட் தெரிவித்தார். இதனைத் தொடர்ந்து அவர் தீர்ப்பை வாசித்தார். அதில்,

ஜம்மு காஷ்மீருக்கு சிறப்பு அந்தஸ்து அளிக்கும் சட்டப்பிரிவு 370 தற்காலிகமானதே. சட்டப்பிரிவு 1 மற்றும் 370இன்படி ஜம்மு காஷ்மீர் இந்தியாவின் ஒருங்கிணைந்த பகுதி. சட்டப்பிரிவு 370 ஏற்படுத்தப்பட்டது ஓர் இடைக்கால ஏற்பாடு. சட்டப்பிரிவு 370ஐ இரத்து செய்வதற்கு இந்திய குடியரசு தலைவருக்கு அதிகாரம் உள்ளது. ஜம்மு காஷ்மீர் இந்தியாவுடன் இணைந்த பிறகு அது தனித்த இறையாண்மையை கொண்டிருக்கவில்லை.

ஜம்மு காஷ்மீரை இந்தியாவுடன் ஒருங்கிணைக்கவே சட்டப்பிரிவு 370 இருந்தது. இந்தியாவில் இருந்து அதனை பிரிப்பதற்காக அல்ல. சட்டப்பிரிவு 370ஐ ரத்து செய்வதற்கான அறிவிப்பை வெளியிடும் அதிகாரம் குடியரசு தலைவருக்கு உண்டு. இதற்காக அவர் சட்டப்பிரிவு 370(3)ஐ பயன்படுத்தியதில் தவறு இல்லை. குடியரசு தலைவர் தனது அதிகாரத்தை பயன்படுத்தியது செல்லுபடியாகும். சட்டப்பிரிவு 370(1)(ன)-ன்படி அரசமைப்பின் அனைத்து விதிகளையும் ஜம்மு காஷ்மீருக்குப் பயன்படுத்தலாம். ஜம்மு காஷ்மீருக்கு அளிக்கப்பட்ட சிறப்பு அந்தஸ்தை இரத்து செய்ய மாநில அரசின் ஒப்புதலை பெறத் தேவையில்லை. சிறப்பு அந்தஸ்து இரத்து செல்லும்.

ஜம்மு காஷ்மீரை இரண்டு யூனியன் பிரதேசங்களாகப் பிரிக்க மத்திய அரசுக்கு உரிமை உள்ளது. மாநிலம் தொடர்பாக மத்திய அரசு எடுக்கும் முடிவுகளை இரத்து செய்யக் கோர முடியாது. இதில் தலையிடுவது, குழப்பத்தையும் நிச்சயமற்ற நிலையையுமே ஏற்படுத்தும். மேலும், நிர்வாகத்தை ஸ்தம்பிக்க வைக்கும். அந்த வகையில், லடாக்கை யூனியன் பிரதேசமாக அறிவித்தது செல்லும். அடுத்த ஆண்டு செப்ரெம்பர் 30ஆம் திகதிக்குள் இந்திய தேர்தல் ஆணையம் ஜம்மு காஷ்மீர் சட்டப்பேரவைக்குத் தேர்தல் நடத்த வேண்டும். ஜம்மு காஷ்மீர் மறுசீரமைப்பு தொடர்பான மத்திய அரசின் அறிக்கையின் படி, விரைவில் ஜம்மு காஷ்மீருக்கு மத்திய அரசு மாநில அந்தஸ்து அளிக்க வேண்டும்.

முன்னதாக தீர்ப்பு வெளியாவதை ஒட்டி ஜம்மு காஷ்மீரில் பலத்த பாதுகாப்பு ஏற்பாடுகள் செய்யப்பட்டிருந்தன. இதன் ஒரு பகுதியாக முன்னாள் முதல் வரும் பி. டி. பி. கட்சியின் தலைவருமான மெஹபூபா முஃப்தி, தேசிய மாநாட்டுக் கட்சியின் முக்கியத் தலைவரும், முன்னாள் முதல்வர் ஒமர் அப்துல்லா ஆகியோர் தாங்கள் வீட்டுச் சிறையில் வைக்கப்பட்டனரெனக் கூறினார். ஆனால், இதனை இந்திய அரசு மறுத்துள்ளது.

(ஐ)

# கோரிக்கையை நிறைவேற்றாதுவிடின் பணய கைதிகள் உயிருடன் திரும்பார்!

## ஹமாஸ் அமைப்பு எச்சரிக்கை

காஸா, டிசெ. 11

தெற்கு காஸாவின் முக்கிய நகரத்தை இஸ்ரேல் குண்டுவீசி தாக்கிய நிலையில், எங்கள் கோரிக்கைகளை நிறைவேற்றாதவரை எந்தவொரு பணய கைதிகளும் உயிருடன் வெளியேற மாட்டார்கள் என ஹமாஸ் எச்சரித்துள்ளது.

இஸ்ரேல் மீது கடந்த 7ஆம் திகதி ஹமாஸ் அமைப்பினர் திடீர் தாக்குதல் நடத்தினர். இதையடுத்து இஸ்ரேல் இராணுவம் காஸா நகர் மீது தாக்குதல் நடத்தி வருகிறது. இந்த நிலையில், கடந்த மாதம் தற்காலிக போர் நிறுத்தத்தின் போது 80 இஸ்ரேல் பணய கைதிகளுக்கு இணையாக 240 பலஸ்தீனக் கைதிகள் விடுதலை செய்யப்பட்டனர். இருப்பினும், தெற்கு காஸாவின் முக்கிய நகரத்தை இஸ்ரேல் குண்டுவீசித் தாக்கியிருக்கிறது. இந்த சூழ்நிலையில் தற்போது இஸ்ரேல் படையினர் நடத்தி வரும் கொடூர தாக்குதலுக்கு ஹமாஸ் அமைப்பினரும் பதிலடி கொடுத்து வருகின்றனர்.

ஹமாஸிடம் இன்னும் பலர் பணயக் கைதிகளாக உள்ளனர். அவர்களை மீட்க இஸ்ரேல் படையினர் தீவிர நடவடிக்கை எடுத்து வருகின்றனர். ஆனால், எங்கள் கோரிக்கைகளை நிறைவேற்றாத வரை எந்தவொரு பணய கைதிகளும் உயிருடன் வெளியேற மாட்டார்கள் என ஹமாஸின் ஆயுதப்பிரிவின் செய்தி தொடர்பாளர் அபு ஒபையா எச்சரிக்கை விடுத்துள்ளார்.

இது குறித்து அவர், “இஸ்ரேலிய படையுடன் தொடர்ந்து யுத்தம் நடத்துவோம். ஒவ்வொரு தெருவிலும், பகுதியிலும், காட்டுமிராண்டி ஆக்கிரமிப்பாளர்களுக்கு எதிராக சண்டை போடுவதைத் தவிர வேறு வழியில்லை. எங்கள் கோரிக்கைகளை நிறைவேற்றாதவரை எந்தவொரு பணயக் கைதிகளும் உயிருடன் வெளியேற மாட்டார்கள். அதோடு, எதிரிகள் எங்களுடைய எதிர்க்கும் தன்மையை உடைப்பதையே முக்கிய நோக்கமாக கொண்டுள்ளனர். ஆனால், நாங்கள் எங்கள் மண்ணில் புனிதமான முறையில் போராடுகிறோம்” என்றார்.

(ஐ)



நோர்வேயின் ஸ்வால்பார்ட் தீவுக்கூட்டத்தில் பனிப்பாறையில் ஒரு துருவ கரடி தூங்குகிறது.... 2023ஆம் ஆண்டுக்கான சிறந்த வனவிலங்கு புகைப்பட விருதுக்கு இந்தப் படம் தெரிவாகியுள்ளது.

# அமெரிக்காவில் புயல் தாக்கம் 85 ஆயிரம் வீடுகள் இருளில்!



வாஷிங்டன், டிசெ. 12

அமெரிக்காவின் டென்னசி மாகாணத்தை சக்திவாய்ந்த புயல் தாக்கியது. பலத்த காற்றால் பல வாகனங்கள் சாலைகளில் கவிழ்ந்து கிடந்தன. புயலை தொடர்ந்து கென்டக்கி, நாஷ்வில்லி, மாண்ட்கோமெரி உள்ளிட்ட பகுதிகளில் கனமழை பெய்தது. இதனால் அங்குள்ள குடியிருப்பு பகுதி முழுவதும் வெள்ளம் சூழ்ந்தது. எனவே பொதுமக்கள் யாரும் வீட்டை விட்டு வெளியேற வேண்டாம் என அரசாங்கம் எச்சரிக்கை விடுத்தது.

இதனிடையே, கனமழையால் ஏற்பட்ட வெள்ளப்பெருக்கில் சிக்கி பல வீடுகள் இடிந்து விழுந்தன. இந்த கட்டட இடிபாடுகளில் சிக்கி ஒரு குழந்தை உள்பட 6 பேர் உயிரிழந்தனர். 20இற்கும் மேற்பட்டோருக்கு படுகாயம் ஏற்பட்டது. மீட்பு படையினர் அவர்களை மீட்டு மருத்துவமனையில் சேர்த்தனர். அங்கு அவர்களுக்கு தீவிர சிகிச்சை அளிக்கப்பட்டு வருகிறது. புயல் முன்னெச்சரிக்கை காரணமாக மின்சாரம் துண்டிக்கப்பட்டது. இதில் சுமார் 85 ஆயிரம் வீடுகள் இருளில் மூழ்கின. இதனால் மக்களின் இயல்பு வாழ்க்கை வெகுவாக பாதிக்கப்பட்டது.

(அ)

# ஆர்ஜென்ரீன ஜனாதிபதியாக சேவியர் மிலி பதவியேற்றார்!

புவனஸ் அயர்ஸ், டிசெ. 12

ஆர்ஜென்ரீனா நாட்டின் ஜனாதிபதியாக பொருளாதார நிபுணரான சேவியர் மிலி பதவியேற்றார். ஆர்ஜென்ரீனா கடுமையான பொருளாதாரா நெருக்கடிக்கு ஆளாகியுள்ள நிலையில் நடந்த தேர்தலில் சேவியர் அபார வெற்றி பெற்றுள்ளார்.

பதவியேற்புக்கு பின்னர் பேசிய அவர்,

“இறைவன் மீதும், என் தேசத்தின் மீதும் ஆணையாக நான் இந்த ஜனாதிபதி பதவியில் உண்மையுடன், தேசபக்தியுடன் செயல்படுவேன். முந்தைய ஆட்சியாளர்கள் கஜானாவை காலி செய்துவிட்டு சென்றுள்ளனர். அவர்களின் நடவடிக்கையால் நாடு அதிதீவிர பணவீக்கத்தை சந்தித்துள்ளது. அரசாங்கத்திடம் பணம் இல்லை. நிதி சீர்திருத்தம்தான் இப்போதைய தேவை. ஆனால், அதன் பலன்கள் அரசாங்கத்



துக்கு வர வேண்டும். தனியார் துறைகள் ஆதாயமடையும் வகையில் இருக்கும்படியான சீர்திருத்தங்களாக இருந்துவிடக்கூடாது” - என்றார்.

ஆர்ஜென்ரீனாவின் பணவீக்கம் மூன்று இலக்கத்தில் உள்ளது. அங்கு தற்போது 40 சதவீத மக்கள் வறுமையில் உள்ளனர். 1.8 கோடி பேர் தங்களின் தனிப்பட்ட தேவைகளைக்கூட பூர்த்தி செய்ய இயலாத நிலையில் உள்ளனர். 10 சதவீத மக்கள் உணவுக்குக்கூட வழியிலாது மோசமான வறுமையில் உள்ளனர். நாட்டில் வேலைவாய்ப்பின்மை 6.2 சதவீதமாக உள்ளது. கடுமையான பணவீக்கம், நாணய மதிப்பு சரிவு என ஆர்ஜென்ரீனா கடுமையான நிதிச் சுழலில் சிக்கியுள்ள சூழலில் ஜேவியரின் பதவியேற்பு அந்நாட்டு மக்கள் மத்தியில் பெரும் எதிர்பார்ப்பை ஏற்படுத்தியுள்ளது. சேவியருக்கும் கடுமையான சவால்கள் காத்திருக்கின்றன.

(ஐ)

# பெருமளவான மாவாவுடன் யாழ்.நகரில் ஒருவர் கைது!

## தனியார் கல்வி நிலையம் அருகே சம்பவம்

யாழ்ப்பாணம், டிசெ. 12

**யாழ்ப்பாண நகரில் பெருமளவான மாவா போதைப்பொருளுடன் ஒருவர் நேற்று கைது செய்யப்பட்டார்.**

பாடசாலை மாணவர்கள் மற்றும் இளைஞர்களை இலக்காகக் கொண்டு குறித்த சந்தேக நபர் போதைப்பாக்கு விற்பனையில் ஈடுபட்டபோது யாழ்ப்பாண பிராந்திய பொலிஸ் புலனாய்வுப் பிரிவினரால் கைது செய்யப்பட்டு யாழ்ப்பாணப் பிராந்திய குற்றதடுப்புப் பிரிவு பொலிஸாரிடம் ஒப்படைக்கப்பட்டார்.

யாழ்ப்பாணம், பெருமாள் கோயிலடியில் உள்ள தனியார் கல்வி நிறுவனமொன்றின் அருகிலேயே 33 வயதான குறித்த சந்தேக நபர் மாவா போதைப் பொருளை விற்பனைக்காக வைத்திருந்தபோது கைது செய்யப்பட்டார்.

இதன்போது 3 கிலோ 686 கிராம் நிறை கொண்ட மாவா போதைப்பொருள் சிறிய சிறிய பைகளில் பொதி செய்யப்பட்ட நிலையில் மீட்கப்பட்டது.

சந்தேக நபர் விசாரணைகளுக்கு பின்னர் யாழ்ப்பாணம் நீதவான் நீதிமன்றத்தில் முற்படுத்தப்படுவார் என தெரிவிக்கப்பட்டது. (அ)



# போலியான கடவுச்சீட்டை பயன்படுத்தி கனடா செல்ல முற்பட்ட இளைஞர் கைது!

கொழும்பு, டிசெ. 12

போலியான கடவுச்சீட்டை பயன்படுத்தி கனடா செல்ல முற்பட்ட இளைஞர் ஒருவர் கட்டுநாயக்க விமான நிலையத்தில் கைது செய்யப்பட்டார்.

விமான நிலையத்தின் புறப்படும் முனையத்தில் வைத்து குடிவரவு மற்றும் குடியகல்வு அதிகாரிகளால் நேற்று முன் தினம் இரவு அவர் கைது செய்யப்பட்டார் என தெரிவிக்கப் பட்டது.

கைதானவர் யாழ்ப்பாணம் - பருத்தித்துறை பகுதியைச் சேர்ந்த 24 வயதுடையவர் என தெரியவந்துள்ளது.

போலியான கடவுச்சீட்டை தயாரிப்பதற்காக கனடாவில் வசிக்கும், குறித்த இளைஞரின் உறவினர் ஒருவர் இலங்கையிலுள்ள தரகர் ஒருவருக்கு 40 இலட்சம் ரூபாவைச் செலுத்தியுள்ளதாகவும் விசாரணைகளில் தெரியவந்துள்ளது. (அ)

# இந்த ஆண்டில் 80 ஆயிரத்தை கடந்தது டெங்கு நோயாளர்களின் எண்ணிக்கை!

கொழும்பு, டிசெ. 12

நாட்டில் இந்த ஆண்டு இது வரை பதிவான மொத்த டெங்கு நோயாளர்களின் எண்ணிக்கை 80,000 கடந்துள்ளது.

தேசிய டெங்கு கட்டுப்பாட்டுப் பிரிவின் புதுப்பிக்கப்பட்ட அறிக்கையில் இந்த விடயம் தெரிவிக்கப்பட்டுள்ளது.

இதன்படி, இந்த வருடத்தில் நேற்று முன் தினம் வரை 80,192 டெங்கு தொற்றாளர்கள் பதிவாகியுள்ளனர். அவர்களில் இந்த மாதத்தில் மாத்திரம் 3,704 பேர் பதிவாகியுள்ளதாக தெரியவந்துள்ளது. (அ)





# தபால் தொழிற்சங்கப் போராட்டத்துக்கு யாழ்ப்பாணத்திலும் நேற்று முழு ஆதரவு

யாழ்ப்பாணம், டிசெ. 12

தபால் திணைக்களத்தின் முகாமைத்துவ மற்றும் செயற்பாட்டுப் பிரச்னைகளுக்கு அதிகாரிகள் தீர்வு காணத் தவறியமைக்கு எதிர்ப்புத் தெரிவித்து ஒன்றிணைந்த தபால் தொழிற்சங்கம் 48 மணிநேர அடையாள வேலைநிறுத்தப் போராட்டத்தை முன்னெடுத்துள்ள நிலையில் யாழ்ப்பாணத்திலும் ஆதரவு வழங்கப்பட்டது.

இந்த வேலைநிறுத்தப் போராட்டம் இன்று நள்ளிரவுடன் நிறைவடையவுள்ளதாக தெரிவிக்கப்படுகின்றது.

இதன்படி, 653 தபால் நிலையங்கள், 3 ஆயிரத்து 410 உப தபால் நிலையங்கள் மற்றும் அனைத்து நிர்வாக அலுவலகங்களும் முடங்கும் எனவும், சுமார் 27 ஆயிரம் தபால் ஊழியர்கள் வேலை நிறுத்தத்தில் ஈடுபடுவார்கள் எனவும் ஒன்றிணைந்த தபால் தொழிற்சங்கம் தெரிவித்துள்ளது. (அ)

# அஞ்சல் அலுவலகர்களின் போராட்டம் தொடர்கிறது!

கொழும்பு, டிசெ. 12

பல கோரிக்கைகளை முன் வைத்து அஞ்சல் தொழிற்சங்கங்கத்தினர் தொடர்ந்தும் பணிப் புறக்கணிப்பில் ஈடுபட்டுள்ளனர்.

நேற்று முன் தினம் மாலை 4 மணிக்கு ஆரம்பிக்கப்பட்ட இந்த பணிப்புறக்கணிப்பு 48 மணித்தியாலங்களுக்கு நீடிக்கும் என அஞ்சல் தொழிற்சங்கங்கள் தெரிவித்தன.

நுவரெலியா மற்றும் கண்டியில் உள்ள அஞ்சல் நிலையங்களை விற்பனை செய்வதற்கு எதிராகவும், 20 ஆயிரம் ரூபா வேதன அதிகரிப்பு உள்ளிட்ட பல கோரிக்கைகளை முன்வைத்தும் அஞ்சல் தொழிற்சங்கத்தினர் இந்த தொழிற்சங்க நடவடிக்கையை ஆரம்பித்துள்ளனர்.

முன்னதாக குறித்த தொழிற்சங்கத்தினர் அஞ்சல் நிலையங்களை விற்பனை செய்யும் தீர்மானத்துக்கு எதிராக 2 நாட்கள் பணிப்புறக்கணிப்பில் ஈடுபட்டிருந்தனர்.

இந்தநிலையில், தற்போது முன்னெடுக்கப்படும் பணிப்புறக்கணிப்பில் அனைத்து அஞ்சல் ஊழியர்களும் இணைந்து கொண்டுள்ளதாக ஒன்றிணைந்த அஞ்சல் தொழிற்சங்க முன்னணியின் இணை அழைப்பாளர் சிந்தக பண்டார தெரிவித்தார். (அ)

# பாராளுமன்ற அமர்வு நேரலையை தவிர்க்குமாறு நாமல் கோரிக்கை!

கொழும்பு, டிசெ. 12

பொதுஜன பெரமுன பாராளுமன்ற உறுப்பினர் நாமல் ராஜபக்ஷ பாராளுமன்ற அமர்வுகளை நேரலைக்கு பதிலாக தாமதமாக ஒளிபரப்புமாறு கோரியுள்ளார்.

நேற்று முன் தினம் அம்பாந்தோட்டையில் நடைபெற்ற நிகழ்வொன்றில் உரையாற்றிய நாமல் ராஜபக்ஷ-

நேரடி ஒளிபரப்பை நிறுத்தி அரை மணி நேரம் தாமதமாக ஒளிபரப்பை வழங்குமாறு சபாநாயகர் மற்றும் அரசாங்கத்தின் பிரதம கொறடாவிடம் கோரிக்கை விடுத்துள்ளதாக தெரிவித்தார்.

"பல பாராளுமன்ற உறுப்பினர்கள் சேறு பூசும் அறிக்கைகளை வெளியிடுவதற்கும் முக்கியமற்ற விடயங்களைப் பேசுவதற்கும் தங்கள் நேரத்தைப் பயன்படுத்துகின்றனர். அவர்கள் நீதித்துறை மற்றும் நீதிபதிகள் குறித்து கருத்து தெரிவிக்க பாராளுமன்ற சிறப்புரிமைகளை பயன்படுத்துகின்றனர். இந்த நடவடிக்கைகளால் பொது மக்கள் பாராளுமன்றத்தின் மீது நம்பிக்கை இழக்க நேரிடுகிறது," என்றார் நாமல்.

அண்மையில் தமக்கு வழங்கப்பட்ட நேரத்தில் எதிர்க்கட்சித் தலைவர் பெரும்பாலும் கிரிக்கெட் பற்றியே பேசியதாக சுட்டிக்காட்டிய பாராளுமன்ற உறுப்பினர் நாமல் ராஜபக்ஷ, 2024 ஆம் ஆண்டுக்கான வரவு -செலவுத் திட்டம் மீதான விவாதங்களின்போது பாராளுமன்றம் என்ன முன்னேற்றம் கண்டுள்ளது என கேள்வி எழுப்பினார்.

இதன் காரணமாக, பாராளுமன்ற அமர்வுகளை தாமதமாக ஒளிபரப்புமாறு கோரியுள்ளதாகத் தெரிவித்த அவர், பாராளுமன்ற அமர்வுகளை நாட்டுக்கும் பொதுமக்களுக்கும் நன்மை பயக்கும் வகையில் பயன்படுத்தப்பட வேண்டும் என மேலும் கூறினார். (அ)

# இவ்வருடம் 3 ஆயிரத்துக்கும் அதிகமான இலஞ்ச ஊழல் முறைப்பாடுகள் பதிவு!

கொழும்பு, டிசெ. 12

இந்த வருடம் நவம்பர் மாதம் வரையான காலப்பகுதியில் 3000க்கும் அதிகமான இலஞ்ச ஊழல் சார் முறைப்பாடுகள் கிடைக்கப் பெற்றுள்ளதாக இலஞ்ச ஊழல் விசாரணை ஆணைக்குழு தெரிவித்துள்ளது.

ஜனவரி 1ஆம் திகதி முதல் நவம்பர் 21ஆம் திகதி வரை 3,255 முறைப்பாடுகள் கிடைக்கப்பெற்றுள்ளதாக ஆணைக்குழு தெரிவித்துள்ளது.

அவற்றுள் அதிகளவு முறைப்பாடுகள் அரச ஊழியர் கட்டமைப்பு செயற்பாடுகளின் அடிப்படையில் கிடைக்கப் பெற்றவையாகக் காணப்படுவதோடு, பொலிஸ் உத்தியோகத்தர்களுக்கு எதிராக கிட்டத்தட்ட 100 முறைப்பாடுகளும், அதிபர்களுக்கு எதிராக கிட்டத்தட்ட 50 முறைப்பாடுகளும் கிடைக்கப்பெற்றுள்ளதாக குறிப்பிடப்பட்டுள்ளது.

கிடைக்கப்பெற்ற இலஞ்ச முறைப்பாடுகளுடன் ஒப்பிடுகையில் விசாரணைப் பணிகளைத் தொடர்வதற்கு ஆணைக்குழுவில் உள்ள வெற்றிடங்களை விரைவாக நிரப்ப வேண்டிய தேவை இருப்பதாகவும் இலஞ்ச ஊழல் விசாரணை ஆணைக்குழு தெரிவித்துள்ளது. (அ)

# வவுனியா பிரதேச செயலகத்துக்கு எதிராக கலைஞர்கள் குற்றச்சாட்டு

வவுனியா, டிசெ. 12

2023ஆம் ஆண்டுக்கான வவுனியா பிரதேச செயலகத்தினால் வழங்கப்படும் கலாநேத்திரா விருதின் தெரிவுகள் துறைசார்ந்த நிபுணர்கள் இன்றி இடம்பெற்றுள்ளதாக கலைஞர்கள் குற்றம் சுமத்தியுள்ளனர்.

குறித்த விருதானது நாடக எழுத்துரு, கீழைத்தேச இசை, மேலைத்தேய இசை, பரதம், குறும்படம், ஊடகம், மரபு இசை உட்பட 18 துறைகளுக்கு வழங்கப்படவுள்ளதாகவும், ஐந்து பேர் கொண்ட துறை சார்ந்த நிபுணர்களினால் வெற்றியாளர்கள் தெரிவுசெய்யப்படுவார்கள் எனவும், வவுனியா பிரதேச செயலாளரால் அறிவிக்கப்பட்டிருந்ததாகக் கூறப்படுகின்றது.

எனினும் வெற்றியாளர்கள் அவ்வாறு தெரிவு செய்யப்படவில்லை எனவும், இதனால் பல திறமையான கலைஞர்கள் பாதிக்கப்பட்டுள்ளனர் எனவும் கலைஞர்கள் குற்றம் சுமத்தியுள்ளனர்.

# கந்தக்காடு புனர்வாழ்வு முகாமில் 100 கைதிகள் தப்பிச் சென்றனர்!

## இரவிரவாக தேடுதல் நடவடிக்கை

கொழும்பு, டிசெ. 12

வெலிகந்தை, கந்தகாடு புனர்வாழ்வு முகாமில் இருந்து நேற்று பிற்பகல் 100 கைதிகள் தப்பிச் சென்றுள்ளதாகவும், அவர்களைக் கண்டுபிடிக்கும் நடவடிக்கை ஆரம்பிக்கப்பட்டுள்ள தாகவும் பொலிஸார் தெரிவித்தனர்.

நேற்று மாலை 5.30 மணியளவில் முகாமில் புனர்வாழ்வு பெற்று வந்த சுமார் 100 பேர் கொண்ட குழுவினர் முகாமின் வேலியை உடைத்துக் கொண்டு தப்பிச் சென்றதாகவும், சம்பவம் பதிவாகிய தருணத்திலிருந்து அவர்களைக் கைது செய்யும் நடவடிக்கை ஆரம்பிக்கப்பட்டுள்ள தாகவும் பொலிஸார் தெரிவித்தனர்.

குறித்த குழுவினர் கந்தகாடு காட்டுப் பகுதிக்கு தப்பிச் சென்றுள்ளதாகத் தெரிவித்த வெலிகந்த பொலிஸ் உத்தி யோகத்தர் ஒருவர், இரவு வேளைகளில் அவர்களைத் தேடுவது மிகவும் சிரமமாக உள்ளதாகத் தெரிவித்தார்.

அதன் காரணமாக வனப்பகுதியை சுற்றி பாதுகாப்பு வலயம் போடப்பட் டுள்ளதாகவும், விரைவில் கைது செய்யப்படுவார்கள் எனவும் அந்த அதிகாரி தெரிவித்தார்.

முகாமில் பதற்றமான சூழ்நிலைக்கு மத்தியில் இந்த குழு தப்பிச் சென்றுள்ள தாகவும் தெரிவிக்கப்படுகிறது.

வெலிகந்த பொலிஸ் நிலையப் பொறுப்பதிகாரி, பிரதான பொலிஸ் பரிசோதகர் சமந்த ரத்நாயக்க தலைமை யில் 30 பேர் கொண்ட குழுவிற்கு மேலதிகமாக, மன்னம்பிட்டிய மற்றும் பொலன்னறுவையைச் சேர்ந்த பொலிசாரும் இரவு அழைக்கப்பட்டுள் ளதாக பொலன்னறுவை பிரதேசத்திற்கு பொறுப்பான சிரேஷ்ட பொலிஸ் அதிகாரி ஒருவர் தெரிவித்தார்.

தப்பியோடியவர்களை கைது செய்யும் நடவடிக்கையில் இராணுவத் தினரும் ஈடுபட்டுள்ளதாக பொலிஸார் உறுதிப்படுத்தியுள்ளனர். (அ)

# தமிழ்நாடு அரசியல் தலைவர்களுடன் பேசுவதே மீனவர் பிரச்னைக்கு தீர்வு!

## அமைச்சர் டக்ளஸ் தேவானந்தா

கொழும்பு, டிசெ. 12

இலங்கை - இந்திய மீனவர் பிரச்னை தமிழகத்துடன் பேச்சு நடத்துவதே சிறந்தது. வட மாகாணத்தை பிரதி நிதித்துவப்படுத்தும் பாராளுமன்ற உறுப்பினர்களும் தமிழ் நாட்டுக்குச் சென்று அங்குள்ள அரசியல் தலைவர்களிடம் இந்த பிரச்னைகள் தொடர்பில் பேச முடியும் என அமைச்சர் டக்லஸ் தேவானந்தா தெரிவித்தார்.

பாராளுமன்றத்தில் நேற்று தனது அமைச்சுக்கான நிதி ஒதுக்கீடு தொடர்பான விவாதத்தில் பங்கேற்று உரையாற்றியபோதே அவர் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

மேலும், இலங்கை இந்திய மீனவர் பிரச்னை நெடுங்காலமாக தொடர்கின்றது. எம்மைப் பொறுத்தவரை நாம் அதற்காக இரண்டு விதமான நடவடிக்கைகளை மேற்கொண்டு வருகின்றோம். முதலாவது நடவடிக்கை இராஜதந்திர ரீதியில் அதனை முன்னெடுப்பது. அந்த வகையில் ராஜதந்திர ரீதியாக பல பேச்சு வார்த்தைகள் நடத்தப்பட்டு அவை பயனளிக்கவில்லை என்பதை குறிப்பிட வேண்டும்.

இரண்டாவதாக சட்ட நடவடிக்கைகள் மேற்கொள்ளுதல்.

அந்த வகையில் சட்ட ரீதியான நடவடிக்கைகள் முன்னெடுக்கப்பட்டு கைதுகள் இடம் பெற்று வருகின்றன. குறிப்பாக நேற்று முன்தினம் மற்றும் இரண்டு தினங்களுக்கு முன்பதாகவும் அத்து மீறி எமது கடற்பரப்பு பிரதேசத்தில் இந்திய மீனவர்கள் மீன்பிடியில் ஈடுபட்டுள்ளனர்.

எமது மீனவர்கள் அதன் போது கடற்படையினரிடம் அது தொடர்பில் முறைப்பாடு செய்துள்ளார்கள். அதன் போது கடற்படையினரும் வேண்டா வெறுப்பாக இந்திய மீனவர்களை கைது செய்ய நடவடிக்கை எடுத்துள்ளார்கள்.

இத்தகைய கைது செய்திகள் தமிழ்நாட்டில் பரப்பப்படும் போது அது பிரச்னைக்குரியதாகின்றது. தமிழ்நாட்டிலுள்ள மீனவர்கள் பாரம் பரியமாக மேற்கொண்டு வரும் தொழில் எனவும் இலங்கை கடற்படையே அவர்களை முறையற்ற விதத்தில் கைது செய்கின்றார்கள் என்றும் அங்குள்ள வர்கள் குற்றச்சாட்டுகிறார்கள்.

அதற்கிணங்க ஒரு புதிய வேலைத் திட்டத்தை முன்னெடுப்பது தொடர்பில் நான் சிந்தித்துள்ளேன். அந்த வகையில் வடக்கிலுள்ள கடற் தொழிலாளர்கள் ஒரு குழுவாக தமிழ்நாட்டுக்கு சென்று அங்கு சம்பந்தப்பட்ட அதிகாரிகளுடன் பேச்சு நடத்தி அங்குள்ள ஊடகங்க ளுக்கும் இங்குள்ள உண்மை நிலையை தெளிவுபடுத்த முடியும்.

இந்திய மீனவர்கள் அத்துமீறியே இலங்கை கடற்பரப்பில் பிரவேசித்து வளங்களை அழிக்கின்றார்கள் என்றும் அதனால் இலங்கை மீனவர்களின் வாழ்வாதாரம் பாதிக்கப்படுவதாகவும் தெரிவித்து அதன் காரணமாகவே கடற்படையினர் அவர்களை கைது செய்வதையும் தெளிவுபடுத்த வேண்டும். அது மட்டுமன்றி வட மாகாணத்தை பிரதி நிதித்துவப்படுத்தும் பாராளுமன்ற உறுப்பினர்களும் தமிழ் நாட்டுக்குச் சென்று அங்குள்ள அரசியல் தலைவர்களிடம் இந்த பிரச்சினைகள் தொடர்பில் பேச முடியும். அத்துடன் அங்குள்ள ஊடகங்களுக்கும் அது தொடர்பில் தெளிவுபடுத்த முடியும் - என்றார். (ஐ)

## வடக்குக்கு...

இதன் உறுதித்தன்மையை எதிர்வரும் 15 ஆம் திகதி அன்றே தீர்மானிக்க முடியும்.

அவ்வாறு ஒரு தாழமுக்கம் உருவாகி னால் வடக்கு மாகாணம் முழுவதும் மிகக் கன மழையைப் பெறும் வாய்ப் புள்ளது.

குறிப்பாக யாழ். மாவட்டம் மிகக் கனமழையைப் பெறும் வாய்ப்புள்ளது. (மிகக் கனமழை கிடைத்தால் யாழ். நகரம் உட்பட்ட தாழ்நிலப் பகுதிகள் வெள்ள அனர்த்தத்தை எதிர்கொள்ளும் வாய்ப்புகள் உண்டு)

வடக்கு மற்றும் கிழக்கு மாகாணத் தின் பல பகுதிகளுக்கும் தற்போது கிடைக்கும் மழை எதிர்வரும் 14 ஆம் திகதி வரை தொடரும்-என்றார். (அ)

## பொதுஜன...

உறுப்பினர் நாமல் ராஜபக்ஷ தெரி வித்துள்ளார்.

இது குறித்து அவர் மேலும் தெரிவிக் கையில்-

கட்சியின் நிர்வாகப் பணிகள் உத்தி யோகபூர்வ அமைப்பிடம் ஒப்படைக்கப் படும் அதேவேளை, கிராம மட்டத்தில் கட்சியை மீளக் கட்டியெழுப்புவது தொகுதி மட்டத்தில் தனியான குழுக்க ளின் ஊடாக முன்னெடுக்கப்படும்.

மேற்குறித்த விடயங்கள் தொடர்பில் தான் அதிக கவனம் செலுத்தி உள்ளோம்.

அடுத்த வருடம் தேர்தல் இடம்பெறும் என தெரிவிக்கப்படுகின்றது. அந்த தேர் தலை எதிர்கொள்ள பொதுஜன பெரமுன கட்சியை பலப்படுத்தவேண்டும்- என்றார். (அ)

## வாழ்நாள்...

களுக்கு மேலாகத் தனது ஊடகப் பணியைச் சிறப்புற ஆற்றி வாசகர்களின் மனங்களில் இடம்பிடித்துள்ளார்.

தமிழீழ விடுதலைப் புலிகள் - இந்திய அமைதிப் படை போர் காலம், விடுதலை புலிகள் - இலங்கை அரசு போர் காலம், சுனாமி பேரலை அனர்த்தம் இடம் பெற்ற காலங்களில் மக்கள் சொல் லொணா துயரங்களை அனுபவித்த காலத்தில் தனது பிராந்தியத்தில் நிகழ்ந்த சம்பவங்கள் அனைத்தையும் உடனுக்கு டன் தான் பணியாற்றிய ஊடகங்கள் மூலம் வெளிக்கொணர அவர் தவறி யதில்லை.

அவர் வெளிக்கொண்டு வந்த பல செய்திகள் சர்வதேசம் வரை பரவின.

அதுமட்டுமல்ல மக்கள் எதிர்நோக் கிய அபிவிருத்தி சார்ந்த பிரச்னைக ளையும் வெளிக்கொணர்ந்து அவற்றுக்கு மக்கள் தீர்வைப் பெறுவதற்கும் உதவியுள்ளார்.

தில்லைநாதன், கண்டியிலிருந்து அக்காலத்தில் வெளிவந்த 'செய்தி' வார இதழில் 1968 ஆம் ஆண்டு தனது ஊடகப் பணியை ஆரம்பித்தார். அதே ஆண்டே யாழ்ப்பாணத்திலிருந்து வெளிவந்து கொண்டிருந்த 'ஈழநாடு' பத்திரிகையில் செய்தியாளரானார். பின்னர் 'வீரகேசரி' பத்திரிகையின் பிராந்திய செய்தியா ளராக அரை நூற்றாண்டாகத் தனது ஊடகப் பணியைத் தொடருகின்றார்.

இதேவேளை, 'தினபதி', 'சிந்தாமணி', 'தினகரன்', உதயன்', 'சுடர் ஒளி', 'காலைக்கதிர்' ஆகிய பத்திரிகைகளிலும் பிராந்திய செய்தியாளராக தில்லைநாத னின் ஊடகப் பணி தொடர்ந்தது. ஈழநாடு பத்திரிகை யாழ்ப்பாணத்தில் மீள ஆரம்பிக்கப்பட்டது முதல் இன்று வரை அவர் ஈழநாடுவின் வடமராட்சி செய்தியாளராக பணியாற்றி வருகின்றார்.

பெரும்பாலான தமிழ் பத்திரிகை களில் தில்லைநாதன் பிராந்திய செய்தி யாளராகப் பணியாற்றியுள்ளார் - பணியாற்றுகின்றார். அவரின் உன்னத ஊடகப் பணிக்கு இந்த விருது சிறந்த சான்றாகும். (அ)

## தமிழ் கட்சிகளை...

இடம்பெற உள்ள நிலையில் அவசரமாக விடுக்கப்பட்டுள்ள இந்த சந்திப்பு தொடர்பில் கொழும்பு அரசியல் வட்டாரங்களில் பரபரப்பு ஏற்பட்டுள்ளது. (அ)

## யாழ்ப்பாணத்...

மேற்கொள்ளப்பட்டு, அடுத்த கட்டப் பணிகள் 2024 இல் ஆரம்பிக்கப்படும்.

இத்திட்டத்தின் மூலம் வடக்கின் நீர்ப் பிரச்னைக்குத் தீர்வு காண முடியும்.

இதன்படி, முடங்கிக் கிடக்கும் யாழ்ப்பாணம் அணைக்கட்டுத் திட்டம் அடுத்த ஆண்டு மீண்டும் ஆரம்பிக்கப் படும் என எதிர்பார்க்கப்படுகிறது.

நெதர்லாந்து அரசாங்கத்தின் கீழ் இத்திட்டத்தின் ஆரம்பகட்ட ஆய்வுகள் மேற்கொள்ளப்பட்டுள்ளன. அதன்படி, திட்டத்தின் முதல் கட்டப் பணிகள் நிறைவடைந்துள்ளதாகவும் 2024ஆம் ஆண்டு மீண்டும் பணிகள் மேற்கொள் ளப்படும்.

வடக்குப் பகுதியைத் தவிர மற்ற அனைத்துப் பகுதிகளிலும் உள்ள ஆறு கள் மற்றும் நீரோடைகளை அதிகபட் சமாகப் பயன்படுத்த முடிந்தது.

கடந்த பருவத்தில் நீர்ப்பாசனத் துறை பெரிதும் வளர்ச்சியடைந்தது. நீர்ப்பா சன அமைச்சின் கீழ் நாட்டில் 30 ஆயிரத் துக்கும் மேற்பட்ட குளங்கள் அபிவி ருத்தி செய்யப்பட்டுள்ளன.

நீர்ப்பாசன அமைச்சின் சில திட்டங் களால் குறிப்பாக யானைகள் அதன் வாழ் விடங்களை இழந்துள்ளன. அந்த விலங்கு களுக்கு உணவு பற்றாக்குறை ஏற்பட்டுள் ளது.

இதனால் அந்த யானைகள் கிராமங்க ளுக்கு நுழைகின்றன. ஓர் அமைச்சு என்ற ரீதியில் இந்தப் புரிந்துணர்வுடன் அபிவி ருத்தித் திட்டங்களை முன்னெடுப்பதில் ஏனைய அமைச்சுகளுடன் ஒருங்கி ணைந்து செயல்பட வேண்டும்-என்றார். (அ)

## வீதியில்...

ஒரு பவுண் காப்பும் அரைப் பவுண் மோதிரமும் கொள்ளையடித்துச் செல்லப்பட்டதாக அச்சுவேலி பொலி ஸார் தெரிவித்தனர்.

இச்சம்பவம் தொடர்பாக அச்சுவேலி பொலிஸார் மேலதிக விசாரணைகளை முன்னெடுத்து வருகின்றனர். (அ)

## அமெ. விசேட...

கொழும்பு, நுவரெலியா மற்றும் கண்டி ஆகிய மாவட்டங்களுக்கு செல்லவுள் ளார்.

மனித உரிமைகள் மற்றும் சமத்து வத்தை மேம்படுத்துவதற்காகவும் அமெரிக்க அரசாங்கத்தின் உறுதிப் பாட்டை வலுப்படுத்துவதற்காகவும், அவர் இலங்கையின் பல்வேறு சமூகங் களுடன் கலந்துரையாடவுள்ளார்.

மலையக தமிழர்கள், சிவில் சமூகக் குழுக்கள் மற்றும் அரசாங்க அதிகாரி களுடன் முக்கியமான சந்திப்புக்களில் ஈடுபடவுள்ளார். (அ)

## யாழ். பல்கலை...

யில் வைத்து விசாரணை மேற்கொண்டனர்.

கடந்த 2022ஆம் ஆண்டு யாழ்ப் பாணம் பல்கலைக்கழகத்தில் நடத்தப்பட்ட முள்ளிவாய்க்கால் நினைவேந்தலை முன்னெடுத்தபோது விடுதலைப் புலிகளின் பாடல் இசைக்கபட்டமை மற்றும் மாணவர் ஒன்றிய செயல்பாடுகள், வடக்கு - கிழக்கு பல்கலைக்கழக மாணவர் ஒன்றியத்தின் செயல்பாடுகள் தொடர்பிலேயே விசார ணைகள் முன்னெடுக்கப்பட்டன என்று தெரியவருகிறது.

நேற்று சுமார் 3 மணித்தியாலங்க ளுக்கும் மேலாக விசாரணைகள் மேற் கொள்ளப்பட்டன என்று தெரியவரு கிறது. (அ)

## உலகத்...

ஹக்கீம் உள்ளிட்டவர்களும் கலந்து கொண்டனர்.

அண்மையில் இலங்கைக்கு வருகை தந்திருந்த உலகத் தமிழர் பரவையின் உறுப்பினர் ஜனாதிபதி ரணில் விக்கிரம சிங்கவை சந்தித்து கலந்துரையாடியி ருந்தனர்.

இதன் போது இமாலய பிரகடனம் ஜனாதிபதி விக்கிரமசிங்கவிடம் கைய ளிக்கப்பட்டது.

இந்த சந்திப்பை தொடர்ந்து யாழ்ப் பாணத்திற்கு விஜயம் செய்த உலகத் தமிழர் பேரவையினர் மதத் தலைவர் களுடன் சந்திப்புகளை நடத்தியிருந் தனர்.

இந்நிலையிலேயே, நேற்று தமிழ் பாராளுமன்ற உறுப்பினர்களுடன் விசேட சந்திப்பை நடத்தியுள்ளனர்.

எவ்வாறாயினும், இந்த சந்திப்பின் போது பேசப்பட்ட விடயங்கள் எவை யும் வெளியாகவில்லை என்பதும் குறிப்பிடத்தக்கது. (அ)

ஈழநாடு
Eelanadu

# கொழும்பில் தமிழரை மட்டும் இலக்குவைத்து பொலிஸ் பதிவு!

## சபையில் மனோ கடும் சீற்றம்



கொழும்பு, டிசெ. 12

**கொழும்பில் தமிழர்களை இலக்கு வைத்து மீண்டும் பொலிஸ் பதிவு இடம்பெறுகின்றது எனவும், அந்த நடவடிக்கை நிறுத்தப்பட வேண்டும் எனவும் தமிழ் முற்போக்கு கூட்டணியின் தலைவரும், கொழும்பு மாவட்ட பாராளுமன்ற உறுப்பினருமான மனோ கணேசன் தெரிவித்தார்.**

பாராளுமன்றத்தில் நேற்று இது தொடர்பில் கருத்து வெளியிட்ட மனோ கணேசன் கூறியவை வருமாறு,

கிருலப்பனை, வெள்ளவத்தை, தெஹிவளை, பம்பலப்பிட்டி, நாராஹேன்பிட்டி, கொட்டாஞ்சேனை, மட்டக்குளி மற்றும் மோதறை ஆகிய பொலிஸ் பிரிவுகளில் வாழும் தமிழ் மக்களை இலக்கு வைத்து, மீண்டும் பொலிஸ் பதிவு இடம்பெறுகின்றது.

சிங்கள மொழி ஊடாகவே விண்ணப்பம் வழங்கப்படுகின்றது. தமிழ் மொழி இல்லை. இது அரசமைப்பை மீறும் செயல்?

நாட்டில் தற்போது போர் இல்லை. பயங்கரவாதம் இல்லை. எதற்காக இந்த பதிவு? கிராம சேவகர்களின் வேலையை பொலிஸார் செய்யக்கூடாது. இந்த பொலிஸ் பதிவு நிறுத்தப்பட வேண்டும். -என்றார். (அ)

# கறுப்பு சால்வையுடன் சபைக்கு வந்த எம்.பி!



கொழும்பு, டிசெ. 12

ஐக்கிய மக்கள் சக்தியின் அம்பாந்தோட்டை மாவட்ட பாராளுமன்ற உறுப்பினர் துலிப் வெதஆராச்சி, மீனவர் களின் அவலத்தை நாட்டுக்கு காட்டவேண்டும் என்பதற்காக கறுப்புச் சால்வை அணிந்து பாராளுமன்றத்துக்கு வந்தார்.

கடற்றொழில் அமைச்சு மீதான பாராளுமன்ற வரவு -செலவுத்திட்ட விவாதத்தை ஆரம்பித்து வைத்து உரையாற்றிய வெதஆராச்சி, தற்போது சுமார் மூவாயிரம் மீன்பிடிப் படகுகள் கடலுக்குச் செல்லாமல் கரையில் கட்டப்பட்டுள்ளதாக குறிப்பிட்டார்.

வற் வரி அதிகரிப்பினால் மீனவர்கள் எப்படி வாழ்வார்கள் என்று தெரியவில்லை எனவும் அவர் குறிப்பிட்டார்.

# ரணிலுடன் ஒருபோதுமே இணையப்போவதில்லை

## சஜித் திட்டவட்டம்

கொழும்பு, டிசெ. 12

ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்கவுடன் ஒருபோதும் இணைந்து செயற்படப்போவதில்லை என எதிர்கட்சி தலைவர் சஜித் பிரேமதாஸ பாராளுமன்றத்தில் தெரிவித்தார்.

ஜனாதிபதியுடன் நல்லுறவு முயற்சிகளில் எதிர்கட்சித் தலைவர் ஈடுபட்டுள்ளார் என ஊடகங்களில் வெளியாகியுள்ள செய்திகள் குறித்து பாராளுமன்றத்தில் கருத்து தெரிவிக்கையில் அவர் இதனை குறிப்பிட்டார்.

சில ஊடக நிறுவனங்கள் போலிச்செய்திகளை பரப்பும் நடவடிக்கைகளில் ஈடுபட்டுள்ளன என குறிப்பிட்ட எதிர்கட்சித் தலைவர், அரசாங்கத்திடமிருந்து பணம் பெற்றுக்கொண்டு அவர்கள் இதனை செய்கின்றார்கள் எனவும் கூறினார். (அ)

# கொழும்பில் தமிழர்களை மட்டும் இலக்கு வைத்து பதிவுகள் இல்லை

## பொதுப்பாதுகாப்பு அமைச்சர் பதில்



கொழும்பு, டிசெ. 12

“கொழும்பில் தமிழ் வீடுகளை மாத்திரம் இலக்கு வைத்து பொலிஸ் பதிவு இடம்பெறவில்லை. அனைத்து வீடுகளிலும்தான் பதிவு இடம்பெறுகின்றது.”-என்று பொதுமக்கள் பாதுகாப்பு அமைச்சர் டிரான் அலஸ் தெரிவித்தார்.

பாராளுமன்றத்தில் இது தொடர்பில் நேற்று கருத்து வெளியிட்ட அமைச்சர்,

“தமிழ், முஸ்லிம், சிங்களம் என மூவின மக்களிடமும்தான் தகவல் திரட்டப்படுகின்றது. தற்போது 90 வீத பணிகள் முடிவடைந்துள்ளன. இந்த நடவடிக்கை முன்னெடுக்கப்படும்.” - எனவும் கூறினார்.

வெளிப் பகுதிகளில் குற்றச்செயல்களில் ஈடுபட்டவர்கள் கொழும்பில் தலைமறைவாகியுள்ளனரா அல்லது கொழும்பில் உள்ளவர்கள் வெளியில் உள்ளனரா என்பது உள்ளிட்ட தகவல்களை பெறவே இந்த பாதுகாப்பு பதிவு இடம்பெறுகின்றது. வீட்டில் எத்தனை பேர் உள்ளனர் என கேட்டால், தகவல்களை வழங்குவது தவறு கிடையாது.” - எனவும் பொது மக்கள் பாதுகாப்பு அமைச்சர் குறிப்பிட்டார். (அ)

# மனித உரிமைகள் மீறலை எதிர்த்து யாழ்ப்பாணத்தில் நேற்று போராட்டம்!



யாழ்ப்பாணம், டிசெ. 12

மனித உரிமைகள் மீறல்களை எதிர்த்து யாழ்ப்பாணத்தில், நேற்று தேசிய மீனவ ஒத்துழைப்பு இயக்கத்தின் வட மாகாணப் பெண்கள் குரல் அமைப்பினரால் கவனயீர்ப்புப் போராட்டமொன்று முன்னெடுக்கப்பட்டது.

இதன்போது வடக்கு மாகாண ஆளுநர் மற்றும் யாழ். மாவட்ட செயலாளர் ஆகியோரிடம் மகஜரொன்றும் கையளிக்கப்பட்டது.

அந்த மகஜரில், இலங்கையில் மனித உரிமை பாதுகாப்பு இன்மையே இங்கு வாழ்கின்ற மக்கள் என்ற ரீதியில் தொடர்ச்சியாக நாங்கள் எதிர் நோக்கி வருகின்றோம். குறிப்பாக நீரியல்வளங்கள்,நிலவளங்கள், சுற்றாடல் போன்ற வள பகிர்வுகளில் அரசாங்கம் மற்றும் மக்களுக்கு இடையிலே உள்ள சமூக ஒப்பந்தம் மீறப்படுவதுடன் அதன் மூலம் மனித உரிமை மீறல்கள் நடைபெறுகின்றன.

அதிலும் வட பகுதியில் தேசிய பாதுகாப்பு என்ற ரீதியில் மக்களின் காணிகள் விடுவிக்கப்படாமை மற்றும் காணி அபகரிப்பு, இராணுவமயமாக்கல், இராணுவ சோதனை தடுப்பு அரண்கள்,மக்கள் மீள்குடியேற்றப்படாமை போன்றவற்றால் இங்கு வாழ்கின்ற மக்களாகிய நாம் பெரும் சவாலையே எதிர்நோக்கின்றோம்.

தற்காலத்தில் பொருட்களின் விலை அதிகரிப்பு, எரிபொருட்களின் விலைஅதிகரிப்பு, சட்டவிரோத மீன்பிடி நடவடிக்கை,இந்திய மீனவர்கள் எமதுகடற்பரபில் மீன்பிடியில் ஈடுபடுகின்றமை,பெண் தலைமைத்துவ குடும்பங்களின் வாழ்வாதாரம், போதைப்பொருள் பாவனை,சமூர்த்தி கொடுப்பனவுகள் சரியான முறையில் கிடைக்கபெறாமை போன்ற சாவால்களையும் மக்களாகிய நாம் எதிர்நோக்குவதுடன் நாட்டின் பொருளாதார கொள்கை,நாட்டின் புதிய சட்ட மற்றும் சட்ட மூலங்கள் சர்தேச உடன்படிக்கைகள் மூலம் வட பகுதி மக்களாகிய நாம் பல இன்னல்களை எதிர் நோக்கின்றோம்.

முல்லைத்தீவு மாவட்ட குருந்தூர் மலைவிவகாரம், திட்டமிட்ட மாகாவலி குடியேற்றங்கள் யாழ்ப்பாண மாவட்டத்தில் தையிட்டி திஸ்ஸ விகாரை போன்ற பல்வேறு பிரச்சனைகளை வட மாகாண பெண்கள் என்ற ரீதியில் எதிர்நோக்குகின்றோம். ஆகவே மேற்கூறப்பட்ட பிரச்சனைகளுக்கு உடனடியாகத் தீர்வு காணப்பட வேண்டும்-என குறிப்பிடப்பட்டுள்ளது. (அ)

# ஜனாதிபதி தேர்தலில் நிச்சயம் வெல்வேன்!

## ஜனக ரத்நாயக்க உறுதி



கொழும்பு, டிசெ. 12

ஜனாதிபதித் தேர்தலில் வெற்றிபெறுவேன் என பொதுப்பயன்பாட்டு ஆணைக்குழுவின் முன்னாள் தலைவர் ஜனக ரத்நாயக்க நம்பிக்கை வெளியிட்டுள்ளார்.

கடந்த மே மாதம் பாராளுமன்ற வாக்களிப்பின் மூலம் பதவி கவிழ்க்கப்பட்ட ஜானக ரத்நாயக்க ஜனாதிபதித் தேர்தலில் போட்டியிடப்போவதை உறுதி செய்துள்ளார்.

கடந்த சனிக்கிழமை மின்துண்டிப்பின் பின்னர் செய்தியாளர்களிடம் கருத்து தெரிவித்த அவர், எதிர்வரும் ஜனாதிபதித் தேர்தலில் நிச்சயமாக வெற்றி பெறுவேன் என குறிப்பிட்டார்.

டிசெம்பர் ஏழாம் திகதி எனது பிறந்த தினத்தன்று நான் ஜனாதிபதி தேர்தலில் போட்டியிடும் அறிவிப்பை வெளியிட்டேன். நான் நிச்சயமாக ஜனாதிபதித் தேர்தலில் போட்டியிடுகின்றேன். அது மாத்திரமன்றி நான் நிச்சயமாக வெற்றி பெறுவேன் எனவும் அவர் கூறினார். (அ)

இப்பத்திரிகை 707, ஆஸ்பத்திரி வீதி, யாழ்ப்பாணம் என்ற முகவரியில் அமைந்துள்ள ஈழநாடு பிறைவேற் லிமிட்டெட் நிறுவனத்தினரால் 12.12.2023 அன்று ஏ9 வீதி, நாவற்குழியில் உள்ள ஈழநாடு பிறைவேற் லிமிட்டெட் அச்சகத்தில் அச்சிட்டு வெளியிடப்பட்டது.

# மேற்கிந்திய அணியில் மீண்டும் அந்த்ரே ரஸல்!




அன்டிகுவா, டிசெ. 12

இரு ஆண்டுகளுக்குப் பின்னர் மேற்கு இந்தியத் தீவுகள் அணியில் அந்த்ரே ரஸல் இடம்பெற்றுள்ளார்.

இங்கிலாந்து அணி, மேற்கு இந்தியத் தீவுகளில் சுற்றுப்பயணம் செய்து 3 ஒருநாள் போட்டி, 5 சர்வதேச ரி -20 விளையாடுகிறது. இதில், ஒருநாள் தொடர் நிறைவடைந்துவிட்டது.

இந்தத் தொடரை 2-1 என மேற்கு இந்தியத் தீவுகள் அணி வென்று சாதனை படைத்துள்ளது. இதையடுத்து சர்வதேச ரி - 20 தொடர் நாளை தொடங்குகிறது.

இந்தத் தொடரில் பங்கேற்கும் இருபது - 20 அணியை மேற்கு இந்தியத் தீவுகள் அணி நிர்வாகம் வெளியிட்டுள்ளது. இதில், அந்த்ரே ரஸலும் இடம் பெற்றுள்ளார்.

ரஸல், ஐ. பி. எல். தொடரில் கொல்கத்தா நைற் ரைடர்ஸ் அணிக்காக விளையாடி வருகிறார். 67 சர்வதேச ரி - 20 போட்டிகளில் விளையாடி 741 ஓட்டங்களும், 112 ஐ. பி. எல். போட்டிகளில் விளையாடி 2,262 ஓட்டங்களும் குவித்துள்ளார் ரஸல்.

மேலும் மேற்கு இந்தியத் தீவுகள் அணியில் முதன்முறையாக மத்யூ போர்ட்டும் இணைந்துள்ளார்.

**அணி விவரம்:** ரோமேன் பாவெல் (கப்டன்), ஷாய் ஹோப், மத்தியூ போர்ட், ரோஸ்டன் சேஸ், ஷிம்ரன் ஹெட்மயர், ஜசன் ஹோல்டர், அகில் ஹொஸைன், அல்சாரி ஜோசப், பிரண்டன் கிங், குடகேஷ் மோடி, நிகோலஸ் பூரன், கைல் மேயர்ஸ், அந்த்ரே ரஸல், ரதர் போர்ட், ரொமாரியோ ஷெப்பர்ட். (ஐ)

# பங்களாதேஷ் - நியூஸிலாந்து டெஸ்ட்; தொடர் 1 - 1 என சமநிலையில் நிறைவு




மிர்பூர், டிசெ. 12

பங்களாதேஷ் அணிக்கு எதிரான 2ஆவது டெஸ்ட் கிரிக்கெட் போட்டியில் நியூஸிலாந்து 4 விக்கெட்கள் வித்தியாசத்தில் வெற்றி பெற்றது. இதன் மூலம் 2 போட்டிகள் கொண்ட டெஸ்ட் தொடரை 1-1 என சமநிலையில் முடித்தது நியூஸிலாந்து அணி.

மிர்பூரில் நடைபெற்று வந்த 2ஆவது மற்றும் கடைசி டெஸ்ட் போட்டியில் முதல் இன்னிங்ஸில் பங்களாதேஷ் அணி 172 ஓட்டங்களும் நியூஸிலாந்து 180 ஓட்டங்களும் எடுத்தன.

8 ஓட்டங்கள் பின்தங்கிய நிலையில் 2ஆவது இன்னிங்ஸை விளையாடிய பங்களாதேஷ் அணி 3ஆவது நாள் ஆட்டத்தின் முடிவில் 8 ஓவர்களில் 2 விக்கெட்கள் இழப்புக்கு 38 ஓட்டங்கள் எடுத்தது. மஹ்முதுல் ஹசன் ராய் 2, நஜ்முல் ஹொசைன் ஷான்டோ 15 ஓட்டங்களில் ஆட்டமிழந்தனர். ஜாகீர் ஹசன் 16, மொமினுல் ஹக் ஓட்டம் ஏதும் எடுக்காமல் களத்தில் இருந்தனர்.

4ஆவது நாள் ஆட்டத்தை தொடர்ந்து விளையாடிய பங்களாதேஷ் அணியானது 35 ஓவர்களில் 144 ஓட்டங்களுக்கு ஆட்டமிழந்தது.

மொமினுல் ஹக் 10, முஸ்பிகுர் ரகிம் 9, ஷஹதத் ஹொசைன் 4, மெஹிதி ஹசன் 3, நூருல் ஹசன் 0, நயீம் ஹசன் 9 ஓட்டங்களில் நடையை கட்டினர். ஒருபுறம் விக்கெட் சரிந்தாலும் மறுமுனையில் சீராக ஓட்டங்கள் சேர்த்த தொடக்க வீரரான ஜாகீர் ஹசன் 86 பந்துகளில், ஒரு சிக்ஸர், 6 பௌண்ட்ரிகளுடன் 59 ஓட்டங்கள் எடுத்த நிலையில் அஜாஸ் பட்டேல் பந்தில் விக்கெட்டை பறிகொடுத்தார். கடைசி வீரராக ஷோரிபுல் இஸ்லாம் 8 ஓட்டங்களில் நடையை கட்டினார். தைஜூல் இஸ்லாம் 14 ஓட்டங்கள் சேர்த்து ஆட்டமிழக்காமல் இருந்தார்.

நியூஸிலாந்து அணி சார்பில் அஜாஸ் படேல் 6, மிட்செல் சாண்ட்னர் 3 விக்கெட்களை வீழ்த்தினர். இவர்கள் கூட்டாக 29 ஓவர்களை வீசினர். ரிம் சவுதி 6 ஓவர்களை வீசி ஒரு விக்கெட் கைப்பற்றினார். 137 ஓட்டங்கள் இலக்குடன் துடுப்பெடுத்தாடிய நியூஸிலாந்து அணி 69 ஓட்டங்களுக்கு 6 விக்கெட்களை இழந்து தவித்தது. டெவன் கொன்வே 2, கேன் வில்லியம்சன் 11, ஹென்றி நிக்கோல்ஸ் 3, டாம் லேதம் 26, ரொம் பிளண்டல் 2, டேரில் மிட்செல் 19 ஓட்டங்களில் வெளியேறினர்.

எனினும் 7ஆவது விக்கெட்டுக்கு களமிறங்கிய மிட்செல் சாண்ட்னர், கிளென் பிலிப்ஸுடன் இணைந்து பொறுப்புடன் விளையாடி அணியை வெற்றி பாதைக்கு அழைத்துச் சென்றார். கிளென் பிலிப்ஸ் 48 பந்துகளில், ஒரு சிக்ஸர், 4 பௌண்ட்ரிகளுடன் 40 ஓட்டங்களும், மிட்செல் சாண்ட்னர் 39 பந்துகளில், 3 பௌண்ட்ரிகள், ஒரு சிக்ஸருடன் 35 ஓட்டங்களும் சேர்க்க நியூஸிலாந்து அணி 39.4 ஓவர்களில் 6 விக்கெட்கள் இழப்புக்கு 139 ஓட்டங்கள் எடுத்து வெற்றி பெற்றது.

4 விக்கெட்கள் வித்தியாசத்தில் வெற்றி பெற்ற நியூஸிலாந்து அணி 2 போட்டிகள் கொண்ட டெஸ்ட் கிரிக்கெட் தொடரை 1-1 என சமநிலையில் முடித்தது. சில்ஹெட்டில் நடைபெற்ற முதல் டெஸ்ட் போட்டியில் வங்கதேச அணி 150 ஓட்டங்கள் வித்தியாசத்தில் வெற்றி பெற்றிருந்தது. ஆட்ட நாயகனாக கிளென் பிலிப்ஸும் தொடர் நாயகனாக தைஜூல் இஸ்லாமும் தெரிவாகினர்.

# வீழ்ந்தது இந்திய மகளிர் தொடர் இங்கிலாந்து வசம்!




மும்பை, டிசெ.12

மகளிர் ரி - 20 கிரிக்கெட் தொடரில் இங்கிலாந்து 2-0 என்ற கணக்கில் இந்திய அணியை வீழ்த்தியது.

இந்தியாவில் சுற்றுப்பயணம் செய்து சர்வதேச ரி -20 கிரிக்கெட் தொடரில் இங்கிலாந்து மகளிர் அணி விளையாடி வருகிறது.

முதலாவது ரி -20 போட்டியில் இங்கிலாந்து வெற்றி பெற்றிருந்தது. இந்த நிலையில், 2ஆவது ரி -20 போட்டி மும்பை வான்கடே மைதானத்தில் நடைபெற்றது.

இதில் இங்கிலாந்து 4 விக்கெட் வித்தியாசத்தில் இந்திய அணியை வீழ்த்தி 2-0 என்ற கணக்கில் தொடரை கைப்பற்றியது.

முதலில் விளையாடிய இந்திய அணி 16.2 ஓவர்களில் 80 ஓட்டங்களுக்கு ஆட்டமிழந்தது. இந்திய அணியில் அதிக அளவாக ரோட்ரிக்ஸ் 30 ஓட்டங்கள் சேர்த்தார்.

இங்கிலாந்து தரப்பில் சார்லோட் டீன், லாரன் பெல், எக்கிள்ஸ்டோன், சாரா கிளென் ஆகியோர் தலா 2 விக்கெட்களை கைப்பற்றினர். நாட் ஷிவர் பிரண்ட், பிரேயா கெம்ப் ஆகியோர் தலா ஒரு விக்கெட்டை வீழ்த்தினர்.

பின்னர் விளையாடிய இங்கிலாந்து அணி 11.2 ஓவர்களில் 6 விக்கெட் இழப்புக்கு 82 ஓட்டங்கள் சேர்த்து வெற்றி பெற்றது. அலைஸ் கேப்சி 25, நாட் ஷிவர் பிரண்ட் 16 ஓட்டங்கள் சேர்த்தனர். (ஐ)

# இந்தியா - தென்னாபிரிக்கா முதல் போட்டி தடைப்பட்டது!

டர்பன், டிசெ. 12

தென்னாபிரிக்க மற்றும் இந்திய அணிக்கு இடையிலான முதல் ரி- 20 போட்டி மழை காரணமாக இரத்து செய்யப்பட்டுள்ளது.

இந்த போட்டி நாணயச் சுழற்சிகூட இடம்பெறாது கைவிடப்பட்டது.

இந்திய கிரிக்கெட் அணி தென்னாபிரிக்காவில் சுற்றுப்பயணம் மேற்கொண்டு கிரிக்கெட் தொடரில் விளையாடி வருகிறது.

இந்தத் தொடரின் முதல் ரி -20 போட்டி டர்பன் நகரில் நேற்று முன்தினம் நடைபெற இருந்தது. ஆனாலும் தொடர்ந்து மழை பொழிந்து கொண்டே இருந்த காரணத்தால் இரத்து செய்யப்பட்டது.

இரு அணிகளும் ரி- 20, ஒருநாள் மற்றும் டெஸ்ட் தொடர்களில் விளையாடுகின்றன. வரும் ஜனவரி 7ஆம் திகதி வரையில் இந்த தொடர் நடைபெறுகிறது. இதில் மூன்று வடிவ கிரிக்கெட்டுக்கும் மூன்று தலைவர்கள் இந்திய கிரிக்கெட் அணியை வழிநடத்த உள்ளனர் என்பது குறிப்பிடத்தக்கது. (ஐ)



# மத்திய கிழக்கில் புட்டினின் தந்திரோபாய நகர்வு : ரஷ்யாவும் ஓபெக் பிளஸ் கூட்டமைப்பும் :

ஐங்கரன் விக்கினேஸ்வரா

ரஷ்ய அதிபர் புட்டினின் மத்திய கிழக்கு நாடுகளுக்கான பயணம் எண்ணெய் உற்பத்தி செய்யும் நாடுகளுடன் முக்கியமான தந்திரோபாய கூட்டணியை அதிகரிக்கும் முயற்சியாகப் பார்க்கப்படுகிறது.

சவூதி அரேபியாவில் ரஷ்ய அதிபர் புட்டினின் இந்த சந்திப்பின் போது கச்சா எண்ணய் விவகாரம் ஒபெக் பிளஸ் (OPEC Plus) நாடுகள் விவகாரம் மற்றும் பாலஸ்தீன காசா மற்றும் உக்ரைன் பிரச்சினை ஆகியவை குறித்தும் பேசப்பட்டது.

ஓபெக் பிளஸ் கூட்டமைப்பு நாடுகள் கடந்த வாரம் கச்சா எண்ணெய் விநியோகத்தை நாள் ஒன்றுக்கு 2.2 மில்லியன் பேரல் அளவுக்கு குறைத்து இருந்தது. இத்தகைய சூழலில் தான் புட்டினின் வளைகுடா பயணம் அமைந்துள்ளது சர்வதேச அளவில் முக்கியத்துவம் பெற்றுள்ளது.

அதிபர் புட்டின் தனது இந்த சுற்றுப்பயணத்தில் எரிசக்தி பிரச்சினைகள் பற்றி மட்டும் பேசாமல் மேற்கத்திய நாடுகள் அல்லாத ஒரு சர்வதேச அணியை கட்டமைக்க புதிய முயற்சிகளை மேற்கொண்டு வருகிறார்.

அத்துடன் புட்டின் ஐக்கிய அரபு இராச்சியத்துக்கும் பயணம் மேற்கொண்டுள்ளார். சவூதி அரேபிய பட்டத்து இளவரசர் முகம்மது பின் சல்மானை புட்டின் சந்தித்து பேசி உள்ளார்.

புட்டினின் இந்த பயணம் சர்வதேச அளவில் கவனம் பெற்றுள்ளது. அமெரிக்கா மற்றும் ஐரோப்பிய நாடுகள் புட்டினின் இந்த பயணத்தை உன்னிப்பாக கவனித்து வருகின்றன.

அத்துடன் மத்திய கிழக்கின் இரண்டு முக்கிய வளைகுடா நாடுகளுக்கு புட்டினின் பயணம் சர்வதேச அரங்கில் ரஷ்யா தனிமைப்படுத்தப்படவில்லை என்பதற்கான தெளிவான சமிக்ஞையை வெளிப்படுத்தி உள்ளது.

### உற்று பார்க்கும் சர்வதேச நாடுகள்:

உக்ரைன் மீது கடந்த ஆண்டு 2022 பிப்ரவரி மாதம் ரஷ்யா போர் தொடுத்தது. இதன் பின் ரஷ்யாவை எதிர்க்க அமெரிக்கா மற்றும் மேற்கு நாடுகள் உக்ரைனுக்கு ஆயுத உதவி மற்றும் நிதி உதவியை அளித்தன. அத்துடன் ரஷ்யாவுக்கு எதிராக பல்வேறு பொருளாதார தடைகளையும் அமெரிக்கா விதித்தது.

இந்த நிலையில், புட்டின் ஐக்கிய அபுதாபிக்கும் பயணம் மேற்கொண்டுள்ளார். புட்டின் மேற்கொண்டுள்ள அரிதான வெளிநாட்டு பயணங்களில் ஒன்றாக இது பார்க்கப்படுகிறது.

உக்ரைன் மீதான ரஷ்யா போர் கிட்டத்தட்ட இரண்டு ஆண்டுகளை நெருங்கிவிட்டது. இன்னொரு பக்கம் புட்டினுக்கு எதிராக சர்வதேச நீதிமன்றம் கைது உத்தரவு பிறப்பித்தது. இதனால், புட்டினுக்கு மேலும் நெருக்கடி அதிகரித்தது.

இதனால், பெரும்பாலும் அதிபர் புட்டின் வெளிநாடு பயணங்களை தவிர்த்து வருவதாக சொல்லப்படுகிறது. ரஷ்யாவின் நட்பு நாடான சீனாவுக்கு மட்டும் கடந்த அக்டோபர் மாதம் புட்டின் சுற்றுப்பயணம் மேற்கொண்டு இருந்தார்.




கடந்த மார்ச் மாதம் சர்வதேச குற்றவியல் நீதிமன்றம் (ஐ.சி.சி) கைது உத்தரவு பிறப்பித்ததில் இருந்து ரஷ்ய அதிபர் புட்டின் எந்தவொரு வெளிநாட்டுப் பயணங்களையும் மேற்கொள்ளவில்லை. ஐக்கிய அரபு இராச்சியம் மற்றும் சவுதி அரேபியா ஆகிய இரண்டு நாடுகளுமே ஐ.சி.சி ஒப்பந்தத்தில் அங்கம் வகிக்காததால் இந்த இரு நாடுகளிலும் புட்டினுக்கு கைது அபாயம் இல்லை.

இந்தியா தலைமையில் புது டெல்லியில் இந்தாண்டு செப்டம்பர் 9 - 10 ஆகிய தேதிகளில் நடைபெற்ற ஜி20 உச்சி மாநாட்டில்கூட புட்டின் பங்கேற்கவில்லை. இத்தனைக்கும் இந்தியா ஐசிசியின் அங்கம் பெற்றது கிடையாது.

### மத்திய கிழக்கில் முக்கிய சந்திப்பு:

2019-ஆம் ஆண்டுக்குப் பிறகு, ரஷ்ய அதிபர் விளாடிமிர் புட்டின் முதல் முறையாக ஐக்கிய அரபு இராச்சியம் மற்றும் சவுதி அரேபியாவுக்கு சென்றுள்ளார். சவுதி பட்டத்து இளவரசர் முகமது பின் சல்மான் மற்றும் ஐக்கிய அரபு இராச்சிய அதிபர் ஷேக் முகமது பின் சயத் அல் நஹ்யன் ஆகியோரை ரஷ்ய அதிபர் விளாடிமிர் புட்டின் சந்தித்து உள்ளார்.



ரஷ்ய அதிபர் புட்டின் மற்றும் சவூதி பட்டத்து இளவரசர் முகமது பின் சல்மான் சந்திப்பின் போது, வர்த்தகம், பொருளாதாரம் மற்றும் முதலீடுகளில் இருதரப்பு ஒத்துழைப்பு குறித்து விவாதிக்கப்பட்டது. மேலும் சர்வதேச பிரச்னைகள், இஸ்ரேல் - ஹமாஸ் இடையேயான போர், கச்சா எண்ணெய் சந்தை, இரு நாட்டு உறவு குறித்து சவூதி பட்டத்து இளவரசர் முகமது பின் சல்மானை சந்தித்து ஆலோசனை நடத்தி உள்ளார்.

**மத்திய கிழக்கில் அதிபர் புட்டினின் பயணம் சர்வதேச அரங்கில் ரஷ்யா தனிமைப்படுத்தப்படவில்லை என்பதற்கான தெளிவான அறிகுறியாக அமைந்துள்ளது. அத்துடன் மத்திய கிழக்கு நாடுகளில் ரஷ்யாவின் செல்வாக்கை மேலும் அதிகரிக்க உதவி உள்ளது.**



ரஷ்ய அதிபர் விளாடிமிர் புட்டின் மற்றும் ஐக்கிய அரபு அமீரக அதிபர் ஷேக் முகமது பின் சயத் அல் நஹ்யான் உடனான சந்திப்பின் போது, இரு நாடுகளின் ஒத்துழைப்பு மற்றும் வளர்ச்சி குறித்து ஆலோசிக்கப்பட்டது.

எனவே புட்டினின் இந்த சுற்றுப்பயணம் மிகுந்த முக்கியத்துவம் பெற்றுள்ளது. ஆயினும் மத்திய கிழக்கில் ரஷ்ய அதிபர் புட்டின் திடீர் பயணமானது, எண்ணெய் உற்பத்தியை பாதிக்குமா என்ற ஐயமும் எழுந்துள்ளது.



### புட்டினின் அரிதான பயணம்:

உக்ரேன் போர் தொடங்கியதற்குப் பின் ஒரு சில நாடுகளுக்கே புட்டின் சென்றுள்ள நிலையில் இந்தச் சந்திப்பு முக்கியமானதாகக் கருதப்படுகிறது.

அதேவேளை மத்திய கிழக்கு நாடுகளில் நடைபெற்று வரும் பிரச்னைகளில் மத்தியஸ்தம் செய்வதற்கான தனது விருப்பத்தை ரஷ்யா தெரிவித்துள்ள இந்த நேரத்தில் புட்டினின் இந்த விஜயம் நடைபெற்றுள்ளது.

இந்த பயணங்களை முடித்த பின் அதிபர் புட்டின், நாடு திரும்பி மாஸ்கோவில் ஈரானிய அதிபர் இப்ராஹிம் ரைசியை சந்திக்கிறார் என மாஸ்கோ அரசியல் வட்டாரங்கள் தெரிவித்துள்ளன. புட்டினின் அழைப்பை ஏற்று ஈரானிய அதிபர் இப்ராஹிம் ரைசி இரான் பிரதிநிதிகளுடன் மாஸ்கோ வந்துள்ளார்.

### ஓபெக் பிளஸ் கூட்டமைப்பு:

2016ஆம் ஆண்டு எண்ணெய் உற்பத்தி செய்யும் நாடுகளின் இந்த கூட்டமைப்பை உருவாக்குவதில் புட்டினுக்கும், முகமது பின் சல்மானுக்கும் இடையில் உறவு வலுப்பெற்றுள்ளது. இந்தக் கூட்டமைப்பு தற்போது ஒபிஇசி பிளஸ் என்ற பெயரில் அறியப்படுகிறது. இரு நாடுகளின் பொருளாதாரத்திற்கும் எண்ணெய் மிக முக்கியமானது.

சவூதி அரபியா, ஐக்கிய அரபு இராச்சியம் மற்றும் ரஷ்யா ஆகிய மூன்று நாடுகளும் எண்ணெய் உற்பத்தி செய்யும் நாடுகளின் கூட்டமைப்பான ஒபெக் ப்ளஸின் முக்கிய அங்கமாகும். இதில் ரஷ்யாவே ஆதிக்க சக்தியாகக் கருதப்படுகிறது. கடந்த வாரம் இந்த நாடுகள் எண்ணெய் உற்பத்தியைக் குறைப்பதற்கு ஒப்புக்கொண்டுள்ளன.

இரு நாடுகளுக்கு இடையிலான எண்ணெய் கொள்கை மற்றும் ரஷ்யாவிற்கும் ரியாத்திற்கும் இடையிலான ஒத்துழைப்பின் முக்கியத்துவம் குறித்து இந்த வார சந்திப்பில் வலியுறுத்தப்மட்டுள்ளது.

இந்த இரு நாடுகளுக்கும் இடையிலான உறவே ஒபெக் ப்ளஸ் கூட்டமைப்புக்கான அடிப்படை என்றும் அழைக்கப்படுகிறது.

ஒபெக் ப்ளஸ் கூட்டமைப்பு நாடுகள் 2024ஆம் ஆண்டின் முதல் காலாண்டில் 2.2 பில்லியன் பேரல்களாக எண்ணெய் உற்பத்தியைக் குறைக்க தற்போது ஒப்புக் கொண்டுள்ளன.

இந்தக் கூட்டமைப்பின் நாடுகள்தான் உலகின் எண்ணெய் உற்பத்தியில் 40 வீதம் உற்பத்திக்குப் பொறுப்பானவை என்பது முக்கியமான விடயமாகும்.



### ஐக்கிய அரபு இராச்சிய - ரஷ்ய உறவு:

ஐக்கிய அரபு இராச்சிய நெருங்கிய உறவுகள் காரணமாக, பல ரஷ்ய நிறுவனங்கள் மேற்குலக நாடுகளின் பொருளாதாரத் தடைகளைத் தவிர்க்க முடிந்தது.

மாஸ்கோ மீது ஐரோப்பா பொருளாதாரத் தடைகளை விதித்தபோது, ரஷ்யாவின் இரண்டாவது பெரிய எண்ணெய் உற்பத்தி நிறுவனமான லுகோயில் தனது வணிகத்தில் பாதியை ஐக்கிய அரபு இராச்சியத்திற்கு மாற்றியது.

ஐக்கிய அரபு இராச்சியம் ரஷ்யாவின் எண்ணெய் நிறுவனங்களுக்கு வணிகத்திற்கான பெரிய சந்தையாக இப்போது மாறியுள்ளது. உக்ரேன் போருக்குப் பிறகு மேற்கத்திய நாடுகள் அவரை தனிமைப்படுத்த முயன்ற போதிலும் புட்டினின் இந்த மத்திய கிழக்கு விஜயம் அவர் வலுவடைந்து வருவதைக் குறிப்பதாகத் தெரிவித்துள்ளது.

அத்துடன் இந்தப் பயணம் மத்திய கிழக்கு நாடுகளில் ரஷ்யாவின் செல்வாக்கை அதிகரிக்க உதவி உள்ளது.

இரண்டு முக்கிய மத்திய கிழக்கின் வளைகுடா நாடுகளுக்கு புட்டினின் பயணம் சர்வதேச அரங்கில் ரஷ்யா தனிமைப்படுத்தப்படவில்லை என்பதற்கான தெளிவான சமிக்ஞை அறிகுறியாகவும் அதிபர் புட்டினின் இந்தப் பயணம் அமைந்துள்ளது.

# இஸ்ரேல் ராணுவம் பாலத்தீனர்களை நிர்வாணமாக்கி சித்ரவதை செய்ததா?

பால் ஆடம்ஸ்

கான் யூனிஸ் மற்றும் காஸாவின் வடக்குப் பகுதியில் சண்டை மூண்டுள்ள நிலையில், பல பாலத்தீனியர்களை இஸ்ரேல் பிடித்து வைத்துள்ளதைக் காட்டும் வீடியோ சமூக ஊடகங்களில் வெளியாகியுள்ளது.

ஊடகங்களால் சரிபார்க்கப்பட்ட இந்தக் காட்சிகளில் அவர்கள் தங்கள் உள்ளாடைகளைக் களையப்பட்டு, தரையில் மண்டியிட்டு, இஸ்ரேலிய படையினரால் கட்டுப்பாட்டில் வைக்கப்பட்டிருப்பதைக் காட்டுகிறது.

காஸா பகுதியின் வடக்கே உள்ள பெய்ட் லாஹியாவில் இவர்கள் கைது செய்யப்பட்டதாகக் கருதப்படுகிறது. இதில் சில ஆண்கள் விடுவிக்கப்பட்டதாக தெரிவிக்கப்பட்டுள்ளது.

தடுத்து வைக்கப்பட்டதாக அடையாளம் காணப்பட்ட ஆண்களில் ஒருவர் நன்கு அறியப்பட்ட பாலத்தீனிய பத்திரிகையாளர் ஆவார்.

வீடியோவை பற்றிக் கேட்டதற்கு, இஸ்ரேலிய அரசாங்கத்தின் செய்தித் தொடர்பாளர் தடுத்து வைக்கப்பட்டிருந்தவர்கள் அனைவரும் ராணுவத்தில் சேர்வதற்கான வயதுடையவர்கள் என்றும், பல வாரங்களுக்கு முன்பே பொதுமக்கள் வெளியேறியிருக்க வேண்டிய பகுதிகளில் கண்டுபிடிக்கப்பட்டவர்கள் என்றும் கூறினார்.

வீடியோவில், டஜன் கணக்கான ஆண்கள் ஒரு நடைபாதையில் வரிசையாக நிற்கிறார்கள் மற்றும் சாலை முழுவதும் சிதறிக் கிடக்கும் தங்கள் காலணிகளை கழற்றச் சொன்னதாகத் தெரிகிறது. இஸ்ரேலிய படைகளும், கவச வாகனங்களும் அவர்களின் பாதுகாப்புக்காக நிற்கின்றன.

மற்ற படங்கள் அவர்கள் ராணுவ டிரக்குகளில் கொண்டு செல்லப்படுவதைக் காட்டுகின்றன. இஸ்ரேலிய ஊடகங்களில், இந்தக் கைதிகள் சரணடைந்த ஹமாஸ் போராளிகள் என்று வர்ணிக்கப்படுகின்றன.

இன்னும் ஊடகங்களால் சரிபார்க்கப்படாத மற்றொரு படத்தில் புல்டோசரால் தோண்டப்பட்ட பெரிய குழியாகத் தோன்றும் இடத்தில் மனிதர்கள் கண்களை மூடியபடி மண்டியிட்டுக் கொண்டிருப்பதைக் காட்டுகிறது.

இஸ்ரேல் பாதுகாப்புப் படை, இந்தப் படங்கள் குறித்து நேரடியாகக் கருத்து தெரிவிக்கவில்லை. ஆனால் செய்தித் தொடர்பாளர் டேனியல் ஹகாரி, "இஸ்ரேல் பாதுகாப்புப் படையின் போராளிகள் மற்றும் ஷின் பெட் அதிகாரிகள் நூற்றுக்கணக்கான பயங்கரவாத சந்தேக நபர்களைத் தடுத்து வைத்து விசாரித்தனர்," என்று கூறினார்.

"அவர்களில் பலர் கடந்த 24 மணிநேரத்தில் எங்கள் படைகளுக்கு தங்களைத் தாங்களே மாற்றிக் கொண்டனர். அவர்களின் விசாரணையில் இருந்து வெளிவரும் தகவல்கள் சண்டையைத் தொடர பயன்படுத்தப்படுகிறது," எனக் கூறினார்.

கடந்த வெள்ளியன்று, இஸ்ரேலிய அரசாங்க செய்தித் தொடர்பாளர் எய்லோன் லெவி, வடக்கு காஸாவில் உள்ள ஜபாலியா மற்றும் ஷேஜாயாவில் ஆண்கள் தடுத்து வைக்கப்பட்டுள்ளனர் என்று கூறினார். அதை அவர் "ஹமாஸ் கோட்டைகள் மற்றும் ஈர்ப்பு மையங்கள்" என்று விவரித்தார்.



"சில வாரங்களுக்கு முன்பு பொதுமக்கள் வெளியேற்றப்பட்டதாகக் கூறப்படும் பகுதிகளில் கண்டுபிடிக்கப்பட்ட ராணுவத்தில் சேர்வதற்கான வயதை ஒத்த ஆட்களைப் பற்றி நாங்கள் பேசுகிறோம்," என்று அவர் கூறினார்.

லெவி மேலும் கூறுகையில், "உண்மையில் யார் ஹமாஸ் பயங்கரவாதி, யார் அல்ல என்பதைக் கண்டறிய" அவர்கள் விசாரிக்கப்படுவார்கள்.

இஸ்ரேலியப் படைகள் ஹமாஸுடன் "நெருக்கமான போரில்" ஈடுபட்ட பகுதிகளில் கைது செய்யப்பட்டவர்கள் கண்டுபிடிக்கப்பட்டதாக அவர் வலியுறுத்தினார். அவர்கள் 'வேண்டுமென்றே பொதுமக்கள் போல் மாறுவேடமிட்டு" சிவிலியன் கட்டடங்களில் இருந்து செயல்பட்டு வந்தனர்.

வியாழன் அன்று பெய்ட் லாஹியாவில் இஸ்ரேலிய ராணுவத்தால் தடுத்து வைக்கப்பட்டிருந்த குழுவில் அவரது உறவினர்கள் 10 பேர் அங்கம் வகித்ததாகக் கூறும் நபரிடம் பிபிசி பேசியுள்ளது.

பாதுகாப்புக் கவலைகள் குறித்து அநாமதேயமாக இருக்க விரும்பும் நபர் - இஸ்ரேல் பாதுகாப்புப் படை வீரர்கள் அந்தப் பகுதிக்குள் நுழைந்து மெகாஃபோன்களை பயன்படுத்தி ஆண்களை அவர்களது வீடுகள் மற்றும் ஐ.நா. நிவாரண நிறுவனம் பள்ளிகளில் இருந்து ஆர்டர் செய்ததாகக் கூறினார்.





அப்பகுதியில் உள்ள பெண்களை அருகிலுள்ள மருத்துவமனைக்குச் செல்லும்படி ஐ.டி.எஃப் உத்தரவிட்டது. பின்னர் ஆண்கள் தங்கள் வீடுகளைவிட்டு வெளியே வரவில்லை என்றால் அவர்களை சுட்டுக் கொல்லப் போவதாக மிரட்டினர், என்றார்.

அந்த நபர் தனது உறவினர்கள் ஏழு பேர் விடுவிக்கப்பட்டு வீடு திரும்பியதாகக் கூறினார். ஆனால் இஸ்ரேலிய காவலில் இருக்கும் மூவரின் கதி என்னவென்று தனக்குத் தெரியாது என்று கூறினார்.

சமூக ஊடகங்களில் ஒரு பதிவில், பிரிட்டனுக்கான பாலத்தீனிய தூதர், "ஐ.நா. தங்குமிடத்தில் இருந்து எடுக்கப்பட்ட பொதுமக்களை இஸ்ரேலிய ஆக்கிரமிப்புப் படைகள் தடுத்து வைத்து அகற்றும் காட்டுமிராண்டித்தனமான படங்கள்," என்று விவரித்தார்.

"இது மனிதகுலத்தின் வரலாற்றின் சில இருண்ட பத்திகளைத் தூண்டுகிறது," என்று ஹுசம் சோம்லாட் கூறினார்.

கைது செய்யப்பட்டவர்களின் வீடியோவில் இருந்தவர்களில் பாலத்தீனிய பத்திரிகையாளர், அல்-அரபி அல்-ஜதீதின் நிருபர் தியா அல்-கஹ்லூட் அடையாளம் காணப்பட்டுள்ளார்.

புதிய அரபு என்ற பெயரில் ஆங்கிலத்திலும் வெளியிடும் அரபு மொழி செய்தி நிறுவனம், அல்-கஹ்லூட் அவரது சகோதரர்கள், உறவினர்கள் மற்றும் "பிற குடிமக்களுடன்" பெய்ட் லாஹியாவில் இஸ்ரேலிய படைகளால் கைது செய்யப்பட்டதாகக் கூறியது.

அல்-அரபி அல்-ஜதீத் வியாழன் அன்று அல்-கஹ்லூத்தை "அவமானகரமான" காவலில் வைத்தது என்று விவரிக்கிறது.

படையினர் ஆண்களை அவர்களது ஆடைகளைக் கழற்றுமாறு வற்புறுத்தியதாகவும், 'அவர்கள் கைது செய்யப்பட்டவுடன், அவர்களை வெளிப்படுத்தாத இடங்களுக்குக் கொண்டு செல்வதற்கு முன், அவர்களை ஆக்கிரமிப்புத் தேடுதல்கள் மற்றும் அவமானகரமான சிகிச்சைக்கு உட்படுத்தினர்" என்றும் அது கூறியது.

இந்த வெளியீடானது "சர்வதேச சமூகம், ஊடகவியலாளர்களின் உரிமைப் பாதுகாவலர்கள், கண்காணிப்பாளர்கள் மற்றும் மனித உரிமை அமைப்புகளை இஸ்ரேல் பிராந்தியத்தில் உள்ள பத்திரிகையாளர்கள் மீது நடத்தும் இந்தத் தாக்குதலைக் கண்டிக்க வேண்டும்" என்று வலியுறுத்துகிறது.

அல்-கஹ்லூட்டின் சக ஊழியர், பாலத்தீனிய பத்திரிகையாளர் லாமிஸ் ஆண்டோனி, வெள்ளிக்கிழமை ரேடியோ 4இன் மாலைநேர நிகழ்ச்சியில், பல கைதிகள் விடுவிக்கப்பட்டதாகக் கூறினார். ஆனால் அல்-கஹ்லூட் விடுவிக்கப்படவில்லை.

விடுவிக்கப்பட்டவர்கள், அவர் இஸ்ரேலில் உள்ள ஜிகிம் ராணுவத் தளத்திற்கு மாற்றப்பட்டதாக கஹ்லூட்டின் குடும்பத்தினரிடம் கூறியதாக அன்டோனி கூறினார்.

"அவர்களின் நிலைமை பற்றி எங்களுக்கு எதுவும் தெரியாது. இந்த மனிதர்களின் புகைப்படங்கள் மற்றும் வீடியோக்கள் பயங்கரமானவை. நான் அதிர்ச்சியடைந்தேன்," என்று அவர் கூறினார். தனது ஊடகம் ஐ.நா வழியாக இஸ்ரேலியப் படைகளுடன் தொடர்பு கொள்கிறது. ●